95.

# விலங்குகளைப் பற்றிய விநோத செய்திகள்



பாபநாசம் குறள்பித்தன்

# விலங்குகளைப் பற்றிய விநோத செய்திகள்!



ஆசிரியர் :

**பாபநாசம் குறள்பித்தன்**

பதிப்பாசிரியர் :

**பெ. மயிலவேலன்**

முத்தமிழ் பதிப்பகம்
9A முதல்தளம்,
மேக்மில்லன் காலனி,
நங்கைநல்லூர்,
சென்னை - 600 061.

# நூல் பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | விலங்குகளைப் பற்றிய விநோத செய்திகள் |
| ஆசிரியர் | : | பாபநாசம் குறள்பித்தன் |
| முதற்பதிப்பு | : | 2000 |
| தாள் விவரம் | : | வெள்ளைத்தாள் |
| நூல் அளவு | : | 1 x 8 கிரவுண் |
| அச்சு எழுத்து | : | 12 புள்ளிகள் |
| பக்கம் | : | 144 |
| பதிப்பகம் | : | முத்தமிழ் பதிப்பகம்<br>9ஏ, முதல்தளம்,<br>மேக்மில்லன் காலனி,<br>நங்கைநல்லூர்,<br>சென்னை - 600 061. |
| விலை | : | ரூ. 35/- |
| ஒளி அச்சு | : | சரஸ்வதி கிராப்பிக்ஸ்<br>48, மேட்டுத் தெரு, வடபழனி,<br>சென்னை - 26.<br>போன் : 4729698 |
| அச்சிட்டோர் | : | மணி ஆப்செட், சென்னை - 5. |

# வாழ்த்துரை

முனைவர் : **கோ. பெரியண்ணன்**
M.A., M.ED., M.Phil., Phd.,
மாநில தலைமையக ஆணையர்,
பாரத சாரண சாரணியர் இயக்கம்,
தலைமையாசிரியர் :
அரசு மகளிர் மேனிலைப் பள்ளி
செங்கற்பட்டு

அடேயப்பா...! விலங்குகளிடம் இவ்வளவு நல்லப் பழக்கங்களா, பண்புகளா? என்று வியப்பாக இருக்கிறது இந்த நூலைப் படித்த போது.

கவிஞரும் எழுத்தாளருமான புலவர் பாபநாசம் குறள்பித்தன் ஏன் விலங்குகளையும், பறவைகளையும் கருப்பொருளாக்கி, கதைகள் எழுதுகிறார் என்பதை அவரின் யானை முதல் பூனை வரை இந்த நூலைப் படித்ததும்தான் எனக்கு உண்மை புரிந்தது. சின்னச் சின்ன வார்த்தைகளால் எளிமையாக இவர் விலங்குகளைப் பற்றி எழுதியிருப்பது படிப்பதற்கு சுவையாக இருக்கிறது - சுகமாகவும் இருக்கிறது.

விலங்குகள் தானே, என்று ஏளனமாக எண்ணுபவர்கள், இந்த நூலைப் படித்தால் மனமாற்றம் பெறுவார்கள். மதி நுட்பம் அடைவார்கள் என்பது உறுதி.

இதுபோன்றே உலகிலுள்ள விலங்குகள், பறவைகளைப் பற்றி பாபநாசம் குறள்பித்தன் எழுத வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அவரைப் பாராட்டி, வாழ்த்துகிறேன்.

அன்புடன்

கோ. பெரியண்ணன்



பாபநாசம் குறள்பித்தன்

# எண்ணத்தை எழுதுகிறேன்...

என் மீது சில நண்பர்களுக்கு வருத்தம் உண்டு. எதனால்?....

மிகுதியாக விலங்குகளையும், பறவைகளையும் வைத்தே சிறுவர்களுக்கு கதை - கட்டுரைகளை எழுது கிறேன் என்பதால் தான்.

நான் என்ன செய்ய..? நான் பிறந்த மண்ணில் நல்ல மனிதர்களைப் பார்த்ததை விட அதிகமாகப் பார்த்தது நல்ல பிராணிகளையும், பறவைகளையும் தான்.

என் வீட்டுத் திண்ணையில் படுத்து, காலையில் எழும் போது, நான் விழிப்பதே மாடு, ஆடு, கோழிகளின் முகத்தில் தானே!

அதனால்தான் இந்த நூலிலும் நான் நித்தமும் பார்த்த - பார்க்காத - பார்த்ததை மறக்க முடியாத சில விலங்கு களைப் பற்றியும் நான் இதுவரை பார்க்காத - படித்த அதிசய விலங்கான ஆர்மடில்லோவைப் பற்றியும் எழுதியிருக் கிறேன்.

இப்படி நான் விலங்குகளைப் பற்றி எழுதக்காரணம்: ஒருவனுக்கு ஒருத்தி என்ற கற்பு நிலையில் வாழ்கின்ற ஓநாயின் பண்பும், விருந்தினரை உபசரிக்கும் யானை களின் சிறப்பும், கூடிவாழும் சிங்கத்தின் உயர்வும், தான் பெற்ற குழந்தைக்காக தன்னையே இழக்கத் துணியும் கங்காருவின் தாய்ப் பாசமும்தான்.

ஐந்தறிவு கொண்ட அவைகளிடம், ஆறறிவு கொண் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பண்புகள் நிரம்பவே இருக்கிறது என்பதை மனம் திறந்து நான் சொல்லியே ஆகவேண்டும்; சொல்லி விட்டேன்.

எப்போதும்போல் என் எழுத்திற்கும், இதயத்திற்கும் துணை நிற்கின்ற துணைவியார் நீலாகண்ணன் அவர் களுக்கு நன்றியும், வணக்கமும்.

கால் நூற்றாண்டுகளாக என்னையும் என் எழுத்தையும் உயர்த்தவே பாடுபட்டு வருகின்ற மன்னை - புண்ணிய குடியில் பிறந்த கெழுதகை நண்பர், தலைமையாசிரியர் கவிஞர். **இளமதிகாந்தன்** அவர்களுக்கும், மாங்காய் சீனிவாசன் அவர்களுக்கும் இந்த நூலை **காணிக்கையாக்கி** மகிழ்கிறேன்.

எப்போதும்போல் மகிழ்வோடு என் எண்ணங்களையும் எழுத்துக்களையும் அச்சு வாகனம் ஏற்றி உலாவிடும் பதிப்பக உரிமையாளர் திரு. பெ. மயிலவேலன் பி.எஸ்.சி. அவர்களுக்கும் பெரும் புலவர் நல்லாமூர் - கோ. பெரியண்ணன் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியும், வணக்கமும்.

நட்புடன்
பித்தன்

முகவரி : 16/52, பக்தவத்சலம் காலனி
முதல் தெரு, வடபழநி, சென்னை - 26.
போன் : 4843135

# பொருளடக்கம்


| | |
|---|---|
| யானை | 7 |
| ஆர்டிமல்லோ | 20 |
| சிறுத்தை | 28 |
| ஒட்டகச்சிவிங்கி | 40 |
| சிங்கம் | 51 |
| நாய் | 57 |
| ஓநாய் | 68 |
| முள்ளம்பன்றி | 71 |
| குரங்குகள் | 75 |
| கங்காரு | 95 |
| நீர்யானை | 103 |
| கரடி | 116 |
| மான் | 120 |
| எலி | 126 |
| கழுதை | 132 |
| ஒட்டகம் | 137 |
| பூனை | 141 |

# விலங்குகளைப்பற்றிய விநோத செய்திகள்!

## யானை



● **யா**னைக்குட்டி பிறந்து ஏழு மாதங்கள் ஆன பிறகுதான், புல் - இலை, தழைகளைத் தின்னத் தொடங்கும்.

● மரத்தின் வயதை அதன் பட்டைகளை வைத்து அறிவதுபோல், யானையின் வயதை அதன் காது, நகத்தை வைத்து கணக்கிடுகிறார்கள்.

● கன்று ஈன்ற யானை மட்டும் அதன் குட்டிக்கு பால் கொடுப்பது இல்லை. மற்ற தாய் யானைகளும் பால் கொடுக்கும் பண்பு யானைகளிடம் உண்டு.

● யானை இரண்டு வேளையில்தான் உறங்கும். ஒன்று கொளுத்தும் வெய்யில் நேரத்தில். அடுத்து நடு ஜாமத்தில்.

● யானை காலையிலும் மாலையிலும் தான் நீர் அருந்தும்.

● ஒரு நாள் யானையின் தீனி 300 பவுண்டு இலை, தழைகளும், 50 காலன் தண்ணீரும்.

● ஒரு பெண் பிரசவிக்கும்போது எப்படி மற்ற பெண்கள் சூழ்ந்து நின்று உதவி புரிகிறார்களோ, அப்படியே ஒரு பெண் யானை பிரசவிக்கும்போது மற்ற யானைகள் கூடி நின்று துணை புரியும்.

● ஆப்பிரிக்காவிலுள்ள சில யானைகளுக்கு கறுப்பு தந்தங்கள் இருக்கிறதாம்.

● யானையின் தீனித் தேவை அதிகம் என்பதால் ஒரு நாளில் 18 மணி நேரத்தை அதற்கே செலவிடுகிறது.

● யானையின் பலம் அதன் தும்பிக்கையில்தான் இருக்கிறது. வலிமை மிக்க சிங்கத்தைக்கூட ஒரே போடு போட்டு சாகடித்து விடும்.

● ஆப்பிரிக்காவில் உள்ள யானைக் குடும்பத்தில் தலைமை கொள்ளும் தகுதி பெண் யானைக்குத்தான் வாய்த்திருக்கிறது.

● யானைக்கு எல்லாமே துதிக்கைதான் என்பதால் காயம் ஏற்படாமல் அது பார்த்துக் கொள்கிறது. அப்படி துதிக்கையில் காயம் ஏற்பட்டு விட்டால் அது மரணத்தை அடைய வேண்டியதுதான்.

● நாள் ஒன்றுக்கு யானை 135 லிட்டர் முதல் 225 லிட்டர் வரை தண்ணீர் குடிக்கும்.

● யானைத் தோலின் கனம் 2 செ.மீ.

● விலங்குகளிலேயே பெரிதான யானை மிக அழகாக, எளிதாக நீந்தக் கூடிய ஆற்றல் பெற்றது.

● ஜிம்பாப்வே நாட்டில்தான் யானைகள் அதிகம்.

● யானையின் தூக்க நேரம் 2 மணி நேரம்தான்.

● ஆண் யானைக்குத்தான் மதம் பிடிக்கும்: பெண் யானைக்கு பிடிக்காது.

● யானையின் துதிக்கையில் எலும்பே கிடையாது. ஆனால் நான்கு லட்ச தசை நார்கள் உள்ளன.

● விலங்குகளில் சர்க்கரைச் சத்து அதிகம் உள்ளது யானையின் பாலில்தான்.

● மாட்டிற்கு 32 பற்கள். யானைக்கு நான்கு பற்கள்தான்.

● இன்ப, துன்பங்களில் மனிதனைப் போல் கண்களில் நீர் விடக் கூடிய விலங்கினம் யானைதான்.

● யானைகள் மற்ற விலங்குகளை கொல்ல நேர்ந்தால், குளிக்காமல் இரை எடுக்காது.

● ஆப்பிரிக்க யானை நின்று கொண்டே தூங்கும். இந்திய யானை படுத்தும் உருளுவதுண்டு.

● பீகாரில் யானைகளுக்கு சந்தை இருக்கிறது.

● யானையின் ஆயுள் காலம் 40 ஆண்டுகள்தான். சில 60, 70 ஆண்டுகள் வாழும்.

● யானையின் துதிக்கை மிக நுட்பமான ஒன்றாகும். அதனைக் கொண்டு கீழே கிடக்கும் மிளகளவுள்ள பொருளைக் கூட அது எடுத்துவிடும்.

● யானைக்கு நுகரும் சக்தி அதிகம் என்பதால் 3. கி. மீ. தூரத்திலுள்ள பொருள்களின் வாசனையைக் கூட அறிந்து கொள்ளும்.

● மனித உடலில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எலும்பின் வளர்ச்சி நின்று விடும். ஆனால்

யானையின் உடலில் வாழ்நாள் முழுதும் வளர்ந்துக் கொண்டே இருக்கும்.

- யானை தன்னை வளர்க்கும் பாகனிடம் மிகவும் அன்புடனும், நன்றியுடனும் இருக்கும்.

- மூக்கால் தண்ணீர் குடிக்கும் ஒரே விலங்கு யானைதான்.

- பெரிய யானைகள்தான் முதலில் நீர் அருந்தும். கடைசியில்தான் அதன் குட்டிகளை அருந்தச் செய்யும்.

- இந்திய யானைகளின் உயரம் சுமாராக 9 அடி முதல் 10 அடிவரை வளரும்.

- விலங்குகளில் நான்கு கால்களாலும் முட்டிப் போடுவது யானை மட்டுமே.

- யானை முடிந்த அளவு உணவை வயிறு நிறைய தின்று கொள்ளும்.

- மாடுகளுக்கும், குதிரைகளுக்கும் இருப்பது போல் யானைகளுக்கு நீண்ட வால் இல்லாததால் ஈ, பூச்சி, வண்டுகள் அதைத் துன்புறுத்தும் போது காப்பாற்றிக் கொள்ள முடிவது இல்லை. இருந்தாலும் இறைவன் யானைகளுக்கு சிறந்த தனி ஆற்றலை தந்திருக்கிறார்

பூச்சிகள், வண்டுகள் யானையின் மீது அமரும்போது அந்த இடத்தில் உள்ள தோலை மட்டும் சுருக்கிக் கொள்ளும். அப்போது அந்த மடிப்புக்குள் மாட்டி அவைகள் இறந்துவிடும்.

● பன்றியின் உறுமல் சத்தத்தைக் கேட்டால் யானை பயந்து விடும்.

● இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மிக்வும் பாதுகாப்பான - தனித்த இடத்தை ரகசியமாகத் தேர்ந்தெடுத்து இணைசேரும்.

● யானைகள் ஆற்றை கடக்க வேண்டிய நேரங்களில் குட்டியானைகளையே முதலில் அனுப்பும். பின்பே, பெரிய யானைகள் செல்லும்.

● யானைக்கு அது உண்ட உணவு ஜீரணமாக 48 மணிநேரம் ஆகும்.

● யானைகள் கால் பந்து விளையாட்டு விளையாடும். உண்மைதான்! நல்ல களி மண்ணை தன் துதிக்கையால் பிசைந்து பந்துபோல் உருண்டையாக உருட்டிப் போட்டு யானைகள் ஒன்று சேர்ந்து காலால் உதைத்து விளையாடும்.

● பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் யானை துதிக்கையால் நீர் அருந்துகிறது என்று; அது உண்மையல்ல.

யானை துதிக்கையால் தண்ணீரை உறுஞ்சுமே தவிர அதன் வழியே அது குடிக்க முடியாது. மூக்கால் எந்த ஒரு விலங்காவது நீர் அருந்த முடியுமா என்ன?

துதிக்கையால் எடுத்த நீரை வாயிலுள் செலுத்தும் என்பதே உண்மையாகும்.

- ஆண் யானைகள் மதம் பிடித்த வேளையில் உடல் உறவில் விருப்பம் கொண்டு பெண் யானைகளைத் தேடிப்போகும்.

ஒரு தடவை ஓர் ஆண் யானை ஒரு பெண் யானையுடன் உடலுறவு கொண்டது என்றால், அடுத்த நிமிடமே அந்த பெண் யானையை அம்போ என்று விட்டுவிட்டுப் போய் விடாது. அதற்குத் துணையாக காவல் நிற்கும்.

- சராசரி வளர்ந்த ஒரு யானையின் துதிக்கை அடி முதல் வால் நுனி வரை 26 அடி நீளமாகும். தந்தம் ஆறு முதல் ஏழு அடி வரை வளரும். உயரம் 10 அடி, யானையின் மொத்த சுற்றளவு 22 அடி.

- பூமி அதிர யானைகள் குதித்து கும்மாள மிட்டு, உரத்த குரலில் பிளிறி நடனமும் ஆடும். எப்போது? ஒரு யானை குட்டியை ஈன்றபோதுதான் அப்படி அவைகள் மகிழ்ச்சியோடு இருக்கும்.

● யானைகளுக்கு எதிரிகளாலோ, இயற்கையாலோ காயங்கள் ஏற்படும் வேளைகளில் அந்த யானைகள் காயங்கள் மீது களிமண்ணை எடுத்துப் பூசிக் கொள்ளும். அதனால் எரிச்சலில் இருந்து விடு படுவதோடு விரைவிலேயே புண்ணும் ஆறிவிடுமாம்.

● போபாஸ் என்பது ஒரு வகை நீர்சத்து மிகுந்த மரமாகும். இவ்வகை மரம் ஆப்பிரிக்கக் காடுகளில் நிரம்ப இருக்கிறது. காடுகளில் தண்ணீர்த் தட்டுப் பாடு ஏற்படும் காலங்களில் யானைகள் அந்த மரத்தின் பட்டைகளைப் பெயர்த்து தங்கள் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளுமாம்.

● யானைகள் கூட்டமாக இரைதேட செல்லும் நேரங்களில் அக்கூட்டத்தில் உள்ள யானைகளில் ஒன்றுக்கு விபத்து ஏற்பட்டுவிட்டால் அந்த யானையை மற்றயானைகள் அப்படியே விட்டு விட்டு சென்று விடாது. மாறாக அந்த யானையை இரண்டு யானைகள் பாதுகாப்பாக அணைத்து அழைத்து வந்து அதன் இருப்பிடத்திலே விட்டு விட்டுத்தான் செல்லும்.

● பர்மா காடுகளில் வாழும் யானைகளின் தலைமைப் பொறுப்பை ஒரு தந்தமில்லாத யானைதான் ஏற்குமாம்.

● யானையைப் பழக்கும் பாகன் யானைக்குப் பயன் படுத்தும் வார்த்தைகள் அதிகமில்லை. 25 வார்த்தைகள் மட்டும்தான்.

● யானைக்கு கோபம் வந்தால் தன் வெறுப்பை எப்படி வெளிப்படுத்தும்? துதிக்கையை ஓங்கி ஓங்கி வேகமாக தரை பிளந்து போவதுபோல் வெறியோடு தரையில் அடித்து பிளிரும். மற்ற நேரங்களில் பிளிருவதற்கும் அதற்கும் இடையே வேறுபாடு தெரியும்.

● யானை வாழும் நாள் வரை குட்டி ஈனும். ஒரு யானை அறுபது வயது வரை உயிர் வாழ்கிறது என்றால் ஏழு அல்லது எட்டு குட்டிகளை ஈனும்.

● பிறந்த யானை குட்டிகளுக்கு சில மாதங்கள் வரை இலை, தழைகளை எப்படித் தின்பது என்பது தெரியாது. அந்த காலங்களில் தாய் யானையே இலை, தழைகளை தன் வாயில் இட்டு மென்று, பின் அதை எடுத்து தன் பிள்ளைக்கு ஊட்டும்.

● பசு மாட்டுக்காம்பில், ஆட்டுக் காம்பில் ஒரு துளைதான் இருக்கும். ஆனால் யானையின் பால்காம்பில் எட்டுத்துளைகள் இருக்கும்.

● விருந்தினர்களை வரவேற்பதில் யானைகளுக்கு நிகர் யானைதான். அடுத்த காட்டில் இருந்து வருகின்ற

யானையை வரவேற்று அந்தக் காட்டில் உள்ள கொழுத்த மரத்தைச் சாய்த்து, அதில் உள்ள தளிர்களையும், இலைகளையும் தின்ன விட்டு பின் மீதம் இருப்பதையே ஒரு யானை தின்னும்.

- எதிர்பாராது வரும் எதிரிகளை மதிநுட்பத்தோடு ஒரு யானை எதிர்கொள்ளும் எதிரிகள் தாக்க வரும்போது குடும்பத்தோடு வாழும் ஆண் யானை பெண் யானையை பின்னே தள்ளி விட்டு முன்னால் அதுவே நிற்கும்.

- யானை கன்று ஈன்றதும் வெளிப்படுகின்ற சீம்பால் ஆயுர்வேத மருத்துவத்தில் சிறந்த மருந்துப் பொருளாக பயன் படுகிறது.

- யானைப்பாலில்தான் அதிகமான கொழுப்புச் சத்து உள்ளது.

- கால் நடை மருத்துவர்கள் யானையின் நாடித் துடிப்பை எப்படி கண்டறிவார்கள்? அதன் காதுக்குப் பின்னே உள்ள நரம்புகளைப் பிடித்துத்தான் நாடித் துடிப்பை அறிவார்கள். யானையின் நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 28 முதல் 40 வரை இருக்கும். அதன் உடல் சூடோ 96.4 அல்லது 97.4 -ஆக இருக்கும்.

● ஒவ்வொரு மாதத்திலும் இரண்டு நாள்களுக்குப் பெண் யானைகள் கருத்தரிப்புக்கு ஆயத்தமான நிலையில் இருக்கும்.

● இத்தகைய பெண் யானைகள் பல கிலோ மீட்டர் தொலைவில் இருந்தாலும் ஆண் யானைகள் அதை எப்படியோ அறிந்துகொண்டு அதை நாடிப்புறப்பட்டு வருகின்றன.

● யானை மிகப் பெருமளவில் உணவு உண்பதால் யானையின் கடைவாய்ப் பற்கள் விரைவில் பாதிப்பு அடையும் . மனிதனுக்கு வாழ்நாளில் ஒரு முறைதான் கடைவாய்ப்பற்கள் முளைக்கும். ஆனால், யானைக்கு மிகப் பெருந்தீனியை அரைக்க அரைக்கத் தேய்வடையும், கடைவாய் பற்கள் உதிர்ந்து விட மீண்டும் முளைக்கும். யானையின் ஆயுட்காலத்தில் ஆறுமுறை கடைவாய்ப்பற்கள் முளைக்கும். ஆறாவது முறை முளைத்த கடைவாய்ப்பற்களும் தேய்வடைந்து விட்டால் யானையால் உணவு உண்ண முடியாமல் இறந்து விடும்.

● யானைகளைப் பழக்கப்படுத்தி, பயன் படுத்துவது நம்முடைய நாட்டில்தான் அதிகம்.

●. நோய் வாய்ப்பட்ட யானைக்கு மருத்துவம் பார்க்கும்போது யானைகாட்டும் ஒத்துழைப்பும்,

பொறுமையும் மனிதர்களைப் பிரமிக்க வைக்கிறது. யானை பொறுமைக்கு மட்டுமல்ல புத்திசாலித் தனத்துக்கும் ஓர் எடுத்துக் காட்டாகும். தன்னுடைய நன்மைக்காக மருத்துவம் செய்யப்படுகிறது என்கிற உணர்வு இல்லாமல் யானை இத்தகைய பொறுமையை காட்டாது. ஏனெனில் குதிரைக்கும், நாய்க்கும் மருத்துவம் செய்யும்போது கூட அவற்றை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துதான் மருத்துவம் செய்ய வேண்டியுள்ளது.

● யானையின் பாதத்தில் கொழுப்பும் சதையும் நிறைந்த கனமான மெத்தைபோல் உள்ளதால், யானை நடக்கும் போது அதன் காலடிச் சத்தம் கேட்பதில்லை. அதனால்தான் யானையின் முதுகில் மணிகளைக் கட்டித் தொங்கப் போடுகிறார்கள்.

● பிறக்கும் போது யானைக்குட்டியின் உடலில் மயிர்கள் இருக்கும். பின் அது வளர வளர உதிர்ந்து விடும்.

● பிறந்து ஆறு மாதங்கள் வரை யானைக்கு குட்டிகளின் உணவு வெறும் தாய்ப்பால் தான்.

● யானை ஒரு நிமிடத்திற்கு 10 தடவை சுவாசிக்கிறது.

● யானையின் லத்தி நிலத்திற்கு நல்ல உரம் என்பதால் அமெரிக்காவில் நல்ல விற்பனை

நடக்கிறதாம். நன்கு வளர்ந்த ஒரு யானை தினசரி 35 கி.கி. லத்தி போடுமாம்.

- யானைக்கு ஆறு முறை பற்கள் விழுந்து முளைக்கும்.

- யானை அமைதியின்றி அங்குமிங்கும் ஓடி பத்திரமான இடத்தில் பதுங்கினால் புயல் வருமாம்.

- ஆப்பிரிக்க யானைகளின் காதுகள் 2 மீட்டர் நீளம் கொண்டவையாக இருக்கும். ஆசிய யானைகளின் காதுகள் சிறியவையாகவே இருக்கும்.

- யானைக்கு மனிதரைப் பார்க்கும் போது யானை அளவு தடியாகவும், உயரமாக்வும் தெரியுமாம். அதுதான் மனிதர்களின் இம்சைகளை யானை பொறுத்துக் கொள்கிறது. யானையின் கண் சிறியதாக இருந்தாலும் பார்வையின் ஒளி அதிகம்.

- யானைக்குப் பிடிக்காத நிறம் வெண்மை.

- யானையின் உயிரணுக்கள் மிகப்பெரியவை. அதனால்தான் யானையின் உருவமும் பெரிதாக இருக்கிறது என்பது சரியல்ல.

திசுக்களின் மொத்த எண்ணிக்கையைப் பொறுத்தே உடலில் உருவம் அமைகிறது. திசுக்களின் அளவைப் பொறுத்து அல்ல. யானையின் உடல் பல கோடி திசுக்களால் ஆனது. ●●●



# ஆர்மடில்லோ

● உடல் முழுதும் ஓட்டுடன் வாழும் ஒரு விநோதமான விலங்கு என்றால் அது ஆர்மடில்லோ தான்.

● தன்னை விட பெரிய விலங்குகளிடமிருந்து சிறிய விலங்குகள் தப்பிப்பதிலேயே தங்கள் வாழ்நாளில் பாதியை கழித்து விடுகின்றன.

● சிறுத்தையிடமிருந்து மானும், நாயிடமிருந்து முயலும், நரியிடமிருந்து கோழியும் தப்பி வாழவே பெரும் சிரமம் எடுத்துக் கொள்கின்றன.

● சில விலங்குகள் ஓடி தப்பித்துக் கொள்ளும். சில நீரில் நீந்தி தப்பித்துக் கொள்ளும், சில பதுங்கி தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும், சில மறைந்து தன்னைக் காத்துக் கொள்ளும். வேறு சில முடிந்தவரை எதிர்த்து சண்டையிடுகின்றன; அதற்கேற்ப அதன் கால் உறுப்புகளும், வாய் உறுப்புகளும் உதவுகின்றன.

● வேறு ஒரு பாதுகாப்பும் சில விலங்குகளுக்கு இயற்கையாகவே அமைந்து விடுகின்றன. அப்படி ஒரு பாதுகாப்பை பெற்ற விலங்குதான் ஆர்மடில்லோ!

● இதன் உடல் முழுதும் ஓட்டினுள் அமைந்து உள்ளது. இதனால், எதிரி விலங்குகளிடமிருந்து எளிதாக தன்னை பாதுகாத்துக் கொள்ள முடிகிறது.

● ஓடு பாதுகாப்பாக இருந்தும் இதனால் சுதந்திரமாக இருக்க முடிவதில்லை! செயல் பட முடியவில்லை.

● இயற்கையின் சீற்றங்களான காட்டுத் தீ ஏற்படும்போது ஆர்மடில்லோவால் ஓடிச் சென்று தீயில் இருந்து தப்பித்துக் கொள்ள முடிவதில்லை. காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து வரும் காலங்களிலும் தாவி ஓடிச் சென்று தன்னைக் காத்துக் கொள்ள முடிவதில்லை.

● உடலைக் காக்கும் ஓடே ஒரு வகையில் ஆர்மடில்லோவிற்கு கழட்டிப் போட முடியாத கவசமாக அமைந்து துன்பம் கொடுக்கிறது என்றே சொல்லலாம்.

● இவ்விலங்குகள் தென் அமெரிக்காவில் உயிர் வாழ்கின்றன. வட அமெரிக்காவில் தென்பகுதி களிலும் சில வகை ஆர்மடில்லோக்கள் வாழ்கின்றன.

● இவற்றில் இருபது வகை இனங்கள் இருக்கின்றன. இதில் பெரிய ஆர்மடில்லோவின் நீளம் சுமார் ஒரு மீட்டர் இருக்கும். மிகச் சிறிய ஆர்மடில்லோவின் நீளம் 12 செ. மீட்டர் இருக்கும்.

● ஆமைகளுக்கு முதுகில் மட்டும் தான் ஓடு இருக்கும் என்பதை நாம் அறிவோம். மற்றபடி கழுத்து, தலை, வால், கால்களுக்கு என்று ஓடுகள் இருக்காது. ஒரே ஓடுதான் இருக்கும்.

ஆனால், ஆர்மடில்லோவிற்கோ ஒன்றுக்கு மேற்பட்ட ஓடுகள் இருக்கும். சில ஆர்மடில்லோவிற்களுக்கு, போர் வீரர்கள் தலைக்கவசம், கை கவசம், மார்பு கவசம், கால் கவசம் என்று போர்க்காலங்களில் அணிந்து இருப்பதைப்போல் தலைக்கு தனி ஓடு, வாலுக்கு தனி ஓடு. முதுகில் உள்ள ஓடு கூட, ஒரே ஓடாக இருக்காது.

● சில ஆர்மடில்லோக்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்டு மூன்று, நான்கு பட்டைகள் இருக்கும். இன்னும் சிலவற்றிற்கு ஒன்பது பட்டைகள் இருக்கும்.

● இந்தத் தனித்தனிப் பட்டைகள் ஒன்றாக இணைந்திருக்கும். எந்த இடத்தில் வேண்டு மானாலும் நீட்டி, மடக்கிக் கொள்ளலாம்.

● கவசம் போன்ற முதுகு ஓட்டினை மடக்கிக் கொள்ளும் வசதி ஆமைக்கு கிடையாது. கொடிய விலங்குகளால் ஆபத்து வரும் என்று அறிந்தால், ஆர்மடில்லோ பந்துபோல் சுருண்டு படுத்துக் கொள்ளும்.

● அதனின் மென்மையான உடல் பாகம் முழுதும் ஓட்டுக்குள் அடங்கி விடும்; இதனால் இரை தேடும் எதிரி விலங்குகளால் இதை ஒன்றும் செய்ய முடியாது. ஓடு கடினமாக இருப்பதால் எதிரிகள் பற்களால் கடித்தாலும் கடிக்க முடியாமல் திண்டாடிப் போய்விடும்.

● இதன் கால் நகங்கள் மிகவும் கூர்மையாக இருக்கும்; அதே நேரம் வலிமைமிக்கதாகவும் இருக்கும். இதன் எதிரி வருவது தெரிந்தால், முதலில் ஆர்மடில்லோ பள்ளத்தை மிகவும் வேகத்தோடு

தோண்டும். தோண்டிய மண்ணை புயல் வேகத்தில் தன் பின்னே வீசி எறியும். தனது உடல் உயரம் மறையும் வரை குழி தோண்டி அதற்குள் நுழைந்து கொள்ளும். தரையின் மட்டத்திற்கு அதன் உடல் இருக்கும். உடல் மீது ஓடு இருப்பதால் கொடிய விலங்குகளால் ஒன்றும் செய்ய முடியாது. ஏனென்றால், கண்ணுக்குத் தெரியும் முதுகு ஓட்டினை அதனால் கவ்விப் பிடிக்க முடியாது.

● எதிரிகள் பிடிக்க வரும்போது பள்ளம் தோண்ட நேரம் இல்லை என்றால், ஆர்மடில்லோ தன் ஓட்டுக்குள் உடலைச் சுருக்கிவைத்து பந்துபோல் கிடந்து விடும்.

● சில வகை ஆர்மடில்லோக்கள் குழி தோண்டி அதனுள்ளே உயிர் வாழ்கின்றன.

● பாலூட்டிகளிலே பற்கள் இல்லாத விலங்கு எது என்றால், இதுதான். இதன் வாயில் ஏகமாக பற்கள் சிறிய அள்வில் இருக்கும், இருந்தும் அதனால் பயன் கிடையாது. இவ்விலங்கிற்கு நீளமான நாக்கு உண்டு. அதில் கோந்துபோல் ஒரு பசை இருக்கும். இதன் இரை வேட்டைக்கு இது தான் துணையாய் இருக்கிறது. பூச்சி, மண்புழு, சிலந்தி, நத்தை போன்றவைதான் ஆர்மடில்லோவின் உண்வு அயிட்டங்கள்.

● பூமிக்கடியில் 20. செ. மீட்டர் தூரத்தில் புழு, பூச்சிகள் இருந்தாலும் கூட அவைகளை அறிந்து கொள்ளும் திறன் ஆர்மடில்லோவிற்கு உண்டு. உடனே தனது முன்னங்கால்களால் பரபரவென்று பூமியைத் தோண்டி, இரையைப் பிடித்து விடும். நீர் நிலைகளை கடந்து செல்லும் ஆற்றல் ஆர்மடில்லோவிற்கு இருக்காது என்றுதான் நமக்கு எண்ணத்தோன்றுகிறது. அதற்குக் காரணம், அதன் உடல் முழுதும் கவசமாய் அமைந்திருக்கும் ஓடுகளால் தான், அதன் கனத்தால்தான்.

● ஆனால், ஆர்மடில்லோ மிகவும் அழகாக நீந்தும் ஆற்றல் கொண்டுள்ளது. அது எப்படி? முதலில் இவ்விலங்கு நன்றாகச் சுவாசித்துக் கொள்ளும். இந்தக் காற்று அதன் நுரையீரல்களை மட்டும் நிரப்புவதில்லை. இரைப்பை, குடல் ஆகிய வற்றையும் நிரப்புகிறது. இந்த சிறப்பான உடல் அமைப்பின் காரணமாக, அது காற்றடைத்த பந்து போல் ஆகித் தண்ணீரில் மிதக்கிறது. ஆனாலும், காற்றைக் கொஞ்ச நேரம்தான் உடலுக்குள் இதனால் வைத்திருக்க முடியும். எனவே, நீரில் நீண்ட நேரம் இருக்க முடியாது.

ஐந்து, ஆறு நிமிட நேரம் வரை இதனால் மூச்சைப் பிடித்துக் கொண்டிருக்க முடியுமாம். ஆற்றையோ,

நதியையோ கடக்க இவ்வளவு நேரம் போதாதா, என்ன?

● அமெரிக்காவின் தென் பகுதியில் ஒன்பது பட்டை ஆர்மடில்லோக்கள் வாழ்கின்றன. மத்திய அமெரிக்கா விலும், அர்ஜென்டனாவிலும் கூட இவை இருக் கின்றன.' இதன் நீளம் 60. செ. மீ. எடை 7. கி.கி..

● இங்குள்ள ஆர்மடில்லோவை விவசாயிகள் மிகவும் விரும்புகிறார்கள். காரணம், பயிர்களை அழிக்கும் புழு, பூச்சிகளை இவை தின்று தீர்ப்பதுதான். ஒன்பது பட்டை ஆர்மடில்லோக்கள் ஒவ்வொரு முறையும் நான்கு குட்டிகளைப் வழக்கமாகப் போடுகிறது. இதில் கூடுதலோ, குறைதலோ எப்போதும் இருப்பதில்லை.

● அதுமட்டுமல்ல அந்த நான்கு குட்டிகளும் ஆணாக இருக்கும். அல்லது அத்தனையும் பெண் ணாக இருக்கும். இதில் எந்த வித மாற்றத்திற்கும் எப்போதும் இடமில்லை.

● முன்காலத்தில் காண்டாமிருகத்தின் அளவுக்கு ஆர்மடில்லோக்கள் வளர்ந்திருந்தன என்று ஆய் வாளர்கள் சொல்கிறார்கள்.

● அமெரிக்காவின் ஆதிமனிதர்கள் தங்கள் குடில்களுக்கு கூரையாக ஆர்மடில்லோவின்

மேலுள்ள ஓட்டையே பயன்படுத்தினார்கள். அப்போது இவ்விலங்கின் ஓர் ஓட்டின் நீளம் 3 மீட்டருக்கும் மேலாக நீண்டிருந்ததாம்.

● இப்போது உள்ள ஆர்மடில்லோக்களின் ஓடுகள் கூரை போடும் அளவிற்கு நீளம் இல்லை. இருப்பினும் தென் அமெரிக்காவின் சில இடங்களில் இதன் ஓடுகளிலிருந்து குவளைகளும், கூடைகளும் செய்கிறார்கள். டூரிஸ்டுகள் இவைகளை வாங்கிச் செல்கிறார்கள். சில ஆதிவாசிகள் இவ்விலங்கின் ஓடுகளில் இருந்து ஒரு வகை இசைக்கருவியை செய்து பயன் படுத்துகிறார்கள்.

● ஆர்மடில்லோவின் இறைச்சி மிகவும் சுவை யானது. இதை தென் அமெரிக்க மக்கள் விரும்பி உண்கிறார்கள். மனித இனத்திற்கு எந்த விதத்திலும் தீங்கு நினைக்காத துன்பம் தராத, புழு, பூச்சிகளிடமிருந்து பயிர்களை காக்கின்ற ஆர்மடில்லோக்கள் பாவமாய் மனிதர்களுக்கு இரை யாவதுதான் வேதனைக்குறிய செயலாகும். இந்த நிலை மாறுமா?.....



# சிறுத்தை

● **வி**லங்குகளில் அதிவேகமாக ஓடக்கூடியது வேட்டை நாய்தான் என்று நீண்ட காலமாக மக்கள் நினைத்து வந்தார்கள். ஆனால் பிறகுதான் தெரிய வந்தது. சிறுத்தையே (CHEETAH) அதிக வேகமாக ஓடக்கூடிய விலங்கு என்று.

● சிறுத்தையின் வேகம் மணிக்கு 100.கி. மீட்டர். ஆனால், அதே வேகத்தில் அதனால் நீண்ட தூரம் ஓட முடியாது.

● சிறுத்தை, பூனையினத்தைச் சேர்ந்தது. புலி, சிங்கம் போன்ற விலங்குகளில் இருந்து சிறுத்தை வேறு பட்டு வேட்டையாடும்.

● புலி, பூனை எல்லாம் இரையை நெருங்கும் வரை மெல்ல பதுங்கியே செல்லும். பின் ஒரே தாவலில் இரையின் மீது பாயும். ஆனால் சிறுத்தை அப்படி இல்லை. இது எப்போதுமே திறந்த வெளியில்தான் வாழும். பதுங்கி வர இயலாது. இரை தென்படும் வரை புல் தரையில் அமைதியாக காத்திருக்கும். தனக்கு வேண்டிய இரையைக் கண்டு விட்டால் ஒரே பாய்ச்சல்தான். இதனுடைய புயல் வேகத்திற்கு எந்த விலங்குகளும் ஈடு கொடுத்து நிற்க முடியாது. எவ்வளவு வேகத்தில் எதிர் விலங்கு தப்பிக்க நினைத்தாலும் சிறுத்தையின் பிடியில் இருந்து நழுவ முடியாது.

● சிறுத்தை தன்னை விட பெரிய வலிமையான விலங்குகளை வேட்டையாடுவதைத் தவிர்த்து விடும். அதனால், ஒட்டகச்சிவிங்கி, காட்டெருமை போன்ற பெரிய விலங்குகளை இது நெருங்குவதே இல்லை. அதே நேரம், தன்னை விட மிகச் சிறிய விலங்குகளான குழி முயல், குட்டிக் குரங்குகளையும் இது வேட்டையாடுவதைத் தவிர்த்து விடுகிறது.

● தனக்கு வேண்டிய இரையைத் தேர்ந்தெடுப்பதில் சிறுத்தை மிகக் கவனமாக எப்போதும் இருக்கும். தனது உழைப்பையும் அதிக ஆற்றலையும் ஒரு போதும் சின்னஞ்சிறிய விலங்குகளை வேட்டை யாடுவதில் வீணாக்குவது இல்லை.

● தனக்கு நிகரான எடையுள்ள விலங்குகளையே எப்போதும் அது வேட்டையாட விரும்புகிறது. அதனால்தான் சிறுத்தை பெரும்பாலும் மான்களையே விரும்பி குறிவைத்து வேட்டையாடுகிறது.

● சில வேளைகளில் தங்களைத் தாக்க வரும் சிறுத்தையை ஆண் மான் கூட்டம் தைரியமாக எதிர்த்து தாக்குவதும் உண்டு. எதிர்பாராத இந்த எதிர்ப்பைக் கண்டு சிறுத்தை திகைத்துப்போய் நின்று விடும். சிறுத்தை தன்னை எதிர்க்கும் எந்த விலங்கு களையும் தாக்குவது கிடையாது.

● தன்னைக் கண்டு பயந்தோடும் விலங்குகளையே துரத்திச் சென்று சிறுத்தை வேட்டையாடும்.

● வீண் சண்டைகள் போட்டு காலத்தையும், உடலில் காயத்தையும் ஏற்படுத்திக் கொள்ள என்றுமே சிறுத்தை விரும்புவது கிடையாது. அதனால்தான் எதிர்ப்பு என்று வரும் போது தானாகவே சிறுத்தை ஒதுங்கிக் கொள்கிறது.

● சில விலங்குகளைப்போல, பிற விலங்குகள் அடித்துப் போட்ட இறைச்சியை சிறுத்தை ஒருபோதும் தின்னாது.

● தானே முயன்று வேட்டையாடிய இரையை மட்டுமே தின்னுகின்ற சிறப்பான பண்பு சிறுத்தை யிடம் இருக்கிறது.

● சிறுத்தைக் குட்டிகள் தாயிடமே வாழ்கிறது. ஆண் சிறுத்தைகளினால் குட்டிகளுக்கு எந்தவித பயனும் இல்லை. பெண் சிறுத்தையின் பண்பு மிகச் சிறந்த ஒன்றாகும். இரையை வேட்டையாடிய பெண் சிறுத்தை அதை உடனே அதே இடத்தில் தின்னாது. தன் குட்டிகளுடன் தான் சேர்ந்து தின்னும். அதனால் தான் வேட்டையாடிய இரையை குட்டிகள் உள்ள இடத்துக்கு இரையை இழுத்து வரும். இழுத்து வந்த இரையை வேறு விலங்குகள் கண்ணில் படாமல், அடர்ந்த புதர் மறைவில் நிழலில் போட்டு குட்டிகளுடன் அமைதியாக பகிர்ந்து தின்னும்.

● பெண் சிறுத்தை வேட்டையாடப் போகும்போது, குட்டிகளை அடர்ந்த புதர் மறைவில் தங்கவிட்டு விட்டுத்தான் தனித்துச் செல்லும். உடன் அழைத்துச் செல்லாது. காரணம், உடன் அழைத்துச் சென்றால் சிங்கம், புலி போன்றவைகளின் கண்ணில் பட்டு இறந்து போய் விடுமே என்பதால்தான்.

● சிறுத்தை, தன் குட்டிகள் இருக்கும் இடத்தை நோக்கிச் செல்லும் போது மிகுந்த விழிப்புடனும், எச்சரிக்கையுடனும், எந்த விலங்குகளின் கண்ணில் படாமலும் செல்லும். குட்டிகள் மறைந்துள்ள அந்த இடத்தில் சிங்கத்தையையோ, புலியையோ பார்த்து விட்டால் போதும், சிறுத்தை தன் குட்டிகள்

மறைந்துள்ள திசைகள் பக்கமே போகாது. அந்த வேளையில் சிறுத்தை தன் போக்கை வேறு திசையில் மாற்றிக் கொண்டு நடக்கத் தொடங்கிவிடும்.

அந்தப் பகுதியை விட்டு சிங்கமோ, புலியோ வேறு இடம் சென்றால்தான் தன் குட்டிகள் இருக்கும் பு தரை நோக்கி சிறுத்தை போகும். பெண் சிறுத்தை தன் குட்டிகளின் பாதுகாப்பை எண்ணி அவைகளின் மறைவிடத்தை சில நாள்களுக்கு ஒரு முறை மாற்றிக் கொண்டேயிருக்கும். அப்படி மாற்றும் போது, பூனை தன் குட்டிகளை வாயில் கவ்வி தூக்கிச் செல்வதைப்போல புது இடத்திற்குத் தூக்கிச் செல்லும்.

● சிறுத்தை ஒரே பிரசவத்தில் மூன்று குட்டிகளைப் போடும். குட்டிகளின் தலையில் வெள்ளி நிறத்தில் பிடரி மயிர் இருக்கும். இந்த வெள்ளிமுடி இரண்டு மாதம் வரைதான் இருக்கும். பின் உதிர்ந்து பிறகு தாயைப்போல அழகான புள்ளிகள் தோன்றிவிடும்.

● சிறுத்தைக் குட்டிகள் மூன்று மாதம் வரைதான் தாயிடம் பால் குடிக்கும். உடலில் சிறிது வலிமை வந்ததும் வேட்டையாடத் தொடங்கிவிடும். தனித்து அல்ல, தாயுடன் தான்.

● குட்டிகளுடன் தாய்சிறுத்தை வேட்டைக்குச் செல்லும்போது அவைகளால் உதவிகள் என்பதை

விட தாய்க்கு உபத்திரமே அதிகம் இருக்கும். எப்படி என்றால், தாய் சிறுத்தை இரையை நோக்கி பாய்வதற்கு முன்பே குட்டிகள் தங்கள் அறியாமை யால் இடையில் புகுந்து இரை தப்பிக்க வழிவகை செய்துவிடும். இருப்பினும் காலப் போக்கில் வேட்டையின் நுணுக்கங்களை குட்டிகள் அறிந்து கொள்ளும் திறமைகள் வந்து விடுகின்றன.

● ஒரு தாய்க்குப் பிறந்த ஆண் குட்டிகள் ஒற்றுமையுடன் வாழ்கின்றன. இதனால், எதிரி களிடமிருந்து எளிதாக தங்களையும், தங்கள் எல்லைகளையும் பாதுகாப்பாக காத்துக் கொள்ள முடிகிறது. அத்தோடு பெண் துணையைத் தேடி இனப் பெருக்கத்திற்கும் வழி தேடிக் கொள்வது எளிதாகிறது.

● தனித்து ஒற்றையாய்ப் பிறந்த ஆண் சிறுத்தையும் தனியே அலைந்து திரிந்து, தன்னைப் போன்ற தனித்த சிறுத்தைகளுடன் சேர்ந்து ஒரு புதிய அணியை உருவாக்கிக் கொள்வதும் உண்டு.

● ஆண் சிறுத்தைகள் என்றும் தங்களுக்குள் வேற்றுமை பாராட்டி ஒரு நாளும் சண்டை போட்டுக் கொள்வது இல்லை. அப்படி சண்டை போட்டுக் கொள்ளும் போது தங்கள் உடல்களில் காயம் ஏற்படும் என்பது ஒருபுறம் இருக்க, எதிரிகளை விரட்ட நாம்

ஒற்றுமையாக இருந்தால்தான்' முடியும் என்பதை உணர்ந்து இருப்பதால், அவைகள் எப்போதும் ஒற்றுமையாகவே இருக்கின்றன. சிறுத்தைகளைப் போலவே சிங்கங்களும் எப்போதும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வது இல்லை.

● பெண் சிறுத்தை ஆண் சிறுத்தையோடு உடலுறவு கொள்ள வேண்டும் என்ற உணர்விற்கு எளிதில் உடன் படுவது இல்லை. இந்த நேரங்களிலெல்லாம் இரண்டு மூன்று ஆண் சிறுத்தைகள் ஒரு பெண் சிறுத்தையைக் கண்டு விட்டால் அது பருவம் வரும் வரை ஒருவர் மாற்றி ஒருவர் வீட்டுக் காவல் போல் இவைகள் காட்டுக் காவல் காத்து, அது வேறு எங்கும் ஓடிவிடாமல் சிறைப் பிடித்து வைத்துக் கொள்கின்றன. இரண்டு மூன்று பேர் சேர்ந்த ஆண் சிறுத்தைக் குழு, காட்டில் தங்களுக்கென்று ஓர் எல்லையை தீர்மானித்துக் கொள்கின்றன. இந்த எல்லைக்குள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண் சிறுத்தைகள் வாழும் பகுதிகள் இருக்குமாறு பார்த்துக் கொள்ளப் படுகின்றன.

● தங்கள் எல்லையைப் பாதுகாத்துக் கொள்ள ஆண் சிறுத்தைகள் ஒரு விநோதமான வழிகளை மேற் கொள்கின்றன. அதாவது, பாறைகள், மரங்கள், செடி, கொடிகள் போன்ற முக்கிய இடங்களில் சாணம் போடுகின்றன, சிறு நீர் கழிக்கின்றன. இதன் மூலம்

இது எங்கள் எல்லை; அதனால் அந்நியர் யாரும் இங்கே நுழையக் கூடாது! என்று அந்த வழியாக வரும் பிற ஆண் சிறுத்தைகளுக்கு எச்சரிக்கை விடுகின்றன. அத்துடன், எல்லைப் பகுதியில் அடிக்கடி இவை முறை போட்டுக் கொண்டு சேர்ந்து வருவதும் உண்டு. அப்போது பெண் சிறுத்தை எங்கே இருக்கிறது என்று நோட்டம் விடும்.

● ஒரு பெண் சிறுத்தையைத் தங்கள் எல்லைக்குள் ஆண் சிறுத்தைகள் பார்த்து விட்டால் போதும். அது வேறு எங்கும் தப்பித்து சென்று விடாதபடி முதலில் பார்த்து கொள்கின்றன. பொதுவாகச் சொல்ல வேண்டும் என்றால் சிறைக்கைதியைப் போல் கண் காணித்து வரும். பிறகு, அந்தப் பெண் சிறுத்தையை காதல் வயப்படுத்த ஆண் சிறுத்தைகள் ஒன்று மாற்றி ஒன்று காதல் போர் நடத்தும். தனி ஆண் சிறுத்தை என்றால் இந்த காதல் வேலை கடினமானதாக இருக்கும். இரண்டு, மூன்று பேர் சேர்ந்து இருந்து காதல் போர் நடத்தினால்தான் எளிதாகிறது. இப்படி ஒன்று மாற்றி ஒன்று ஊடல் புரிந்து காதல் செய்தால்தான் பெண் சிறுத்தை காதல் வயப்படத் தொடங்குகிறது. அதாவது பெண் சிறுத்தைக்கு காமவெறி ஏற்பட செய்கின்றன.

● பெண் சிறுத்தையைப் பொறுத்தவரை உடலுறவு என்பது ஒரு முரட்டுத்தனமான விளையாட்டாகவே

இருக்கிறது. மூர்க்கத்தனமாகவும், முரட்டுத்தன மாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் உடலுறவு கொண்டால்தான் பெண் சிறுத்தையால் கருத்தரிக்க முடியும் என்று கூறப்படுகிறது.

● ஒரு பெண் சிறுத்தை உடலுறவிற்கு சம்மதித்து விட்டால் போதும், ஆண் சிறுத்தைகள் காமவெறி யுடன் அதைத் துரத்தும், உறுமும். பலமாக அதன் உடலிலே அடிக்கும். இத்தகைய முரட்டுத் தனங்களைத் தொடர்ந்து பெண், இறுதியில் இனங்கும் போது, ஒவ்வொரு ஆண் சிறுத்தையும் அதனுடன் மாறிமாறி உறவு கொள்ளும். கருதரிக்கும். இந்த மோகவெறியும், காதலர் போராட்டமும் இல்லாததால்தான் மிருகக்காட்சி சாலைகளில் அடைபட்டுக் கிடக்கும் காரணத்தால் பெண் சிறுத்தைகள் எப்போதாவது கருத்தரிக்கின்ற வாய்ப்பு க்கு ஆட்படுகின்றன.

● சிங்கம், புலி, பூனை போன்ற விலங்குகளின் பாதங்களில் கூர்மையான வளைந்த நகங்கள் இருக்கும். இந்த நகங்களை தேவைக்கு ஏற்ப பாதத்திற்குள் இழுத்து வைத்துக் கொள்ள இவை களால் முடியும். ஆனால் சிறுத்தையால் அப்படி வைத்துக் கொள்ள இயலாது. இதனால் அதன் நகங்கள் மழுங்கலாய் இருக்கும்.

சிறுத்தை குட்டியாய் இருக்கும்போது இருக்காது. ஆமாம், இது குட்டியாய் இருக்கும்போது இரண்டரை மாதம் வரை நகங்களை பாதத்திற்குள் இழுத்து பிறகுதான் முடியாமல் போகிறது. எனவே அதன் நகங்கள் கூர்மங்கி மென்மையாய் போய்விடுகிறது. ஆனால், சிறுத்தை காட்டில் அதி வேகமாக ஓடும்போது, தரையை இறுக்கமாகப் பற்றிக் கொள்ள இந்த மொட்டை நகப்பாதம் பயன்படுகிறது.

● சிறுத்தைக்கு வால் நீண்டிருக்கும். அந்த வாலின் நுனி பஞ்சுபோன்று பெருத்து இருக்கும். சிறுத்தை அதிவேகமாக பாய்ந்து பாய்ந்து ஓடும்போது உடலைச் சமநிலையில் வைத்துக் கொள்ள இந்த வாலே பயன் படுகிறது. சிறுத்தைக்கு மரம் ஏறத் தெரியாததால் அதனால், சற்று உயரமான கறையான் புற்றுகளின் மீதோ பெரிய பாறைகளின் மீதோ, கம்பீரமாக ஏறி உட்கார்ந்து கொண்டு, தனக்கு வேண்டிய இரை வருகிறதா என்று நோட்டம் விடும்.

● செயற்கையான சூழ்நிலையில் வளரும் சிறுத்தை களில் 15 சதவிகிதத்திற்கும் குறைவானவையே கருத்தரிப்பதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இவை போடும் குட்டிகளில் 40 சதவிகிதம், பிறந்த ஒரு சில நாள்களிலேயே இறந்து விடுகின்றன.

● சீட்டா எனப்படும் சிறுத்தையைத் தவிர லெப்பர்ட் எனப்படும் ஒரு வகை சிறுத்தையும் உண்டு.

சீட்டாவைவிட லெப்பர்ட் வலுவானது, சற்று எடை அதிகமுள்ளது. சண்டைபோடும் இயல்பு கொண்ட இதன் முகம் சீட்டாவை விடப் பெரியது.

சீட்டாவின் மீசை குட்டையாக இருக்கும், லெப்பர்டின் மீசை நீண்டிருக்கும்.

சீட்டாவின் உடலில் புள்ளிகள் சிறியதாக இருக்கும். ஆனால், லெப்பர்டின் புள்ளிகள் சற்று பெரிதாக இருக்கும்.

சீட்டாக்கள் பகலில் வேட்டையாடும். விடியலில் அல்லது மாலை வேளையில் லெப்பர்ட் வேட்டைக்குக் கிளம்பும். இரவிலும் வேட்டையாடும்.

சீட்டாக்கள் சமவெளியில் வாழ்பவை. ஆனால் லெப்பர்ட் பாலைவனங்களில் வாழும். மலைகளிலும் வாழும். சதுப்பு நிலத்திலும் இருக்கும், மரங்கள் செழித்த காடுகளிலும் இருக்கும்.

சீட்டாவைப்போல கூட்டமாய்ச் செல்லாமல் காட்டில் தனித்தே செல்லும் இயல்பு கொண்டது லெப்பர்ட். சீட்டாக்கள் தங்கள் உணவைத் தேர்ந்தெடுத்து வேட்டையாடும். லெப்பர்ட் அப்படி அல்ல. எந்த மிருகம் என்றாலும் ஒரு கைபார்க்கும்.

இரையை மற்ற விலங்குகளிடமிருந்து காத்துக் கொள்வதில் சீட்டாக்களை விட லெப்பர்ட்டுகளுக்குச் சாமர்த்தியம் அதிகம்.

சீட்டா தனது குட்டிகளை அடர்ந்த புதர்களில் வைத்து பாதுகாக்கும். ஆனால் லெப்பர்ட் மலைக் குகைளில், பாறைகளில், மரப்பொந்துகளில் வைத்து பாதுகாக்கும்.

லெப்பர்ட் ஒருமுறை இரண்டு அல்லது மூன்று குட்டிகளைப் போடும்.

உடலுறவுக்கு சீட்டாவைப்போல் குழுவாக ஆண் லெப்பர்ட் அலைவதில்லை, தனித்தே பெண் லெப்பர்ட் அணுகுகிறது.





# ஒட்டகச் சிவிங்கி

◆ ஒட்டகச் சிவிங்கியால் எந்த ஒலியும் எழுப்ப முடியாது.

◆ ஒட்டகச் சிவிங்கிக்கு ஒரு சிறப்பான அமைப்பு உள்ளது. அது தன் கழுத்தைத் திருப்பாமலேயே கண்ணைப் பின் நோக்கிச் செலுத்தித் தனக்குப் பின்புறம் இருப்பவர்களைப் பார்க்கும் திறமை யுடையது.

◆ ஒட்டகச் சிவிங்கி மணிக்கு 32 மைல் வேகத்தில் ஓடும்.

◆ காட்சி சாலை ஒன்றில் இருப்பதுதான் ஜார்ஜ் என்று அழைக்கப்படும் ஒரு ஆண் ஒட்டகச்சிவிங்கி. இது வரை அறியப்பட்ட ஒட்டகச் சிவிங்கிகளி லேயே மிகவும் உயரமானது. இதன் உயரம் 22 அடி.

◆ ஒட்டகச் சிவிங்கியின் சராசரி உயரம் 16 அடி. பெண் ஒட்டகச் சிவிங்கியின் உயரம் 14 அடி.

◆ பசுமையான இலைகள் அடர்ந்துள்ள மரங் களைக் கண்டால் ஒட்டகச் சிவிங்கிக்குக் குஷி தான். ஒரு நாளைக்கு 65 கி.கி இலைகளை தின்று தீர்த்து விடும். ஒட்டகச்சிவிங்கிக்கு அதிக உணவு தேவை என்பதால் நாளில் பாதி நேரத்தை உண்பதிலேயே செலவழிக் கின்றது.

◆ ஒட்டகச்சிவிங்கிக்கு மற்ற விலங்குகளைப்போல் நாக்கின் நிறம் இருக்காது. அதன் நாக்கு கன்னங் கரேல் என்று தான் இருக்கும்.

◆ இதன் நாக்கின் நீளம் ஒன்றரை அடி நீளம் இருக்கும்.

◆ உயரமான மரங்களிலிருந்து இலைகளைப் பறிக்கப் பேருதவியாக இருக்கும் ஒட்டகச்சிவிங்கிக்கு அதன் நீண்ட கழுத்து தண்ணீர் குடிக்கும் போது பெருந்தொல்லையாக அமைந்து விடுகிறது.

◆ ஆப்பிரிக்காவின் வெப்பக்காடுகளில் மட்டுமே வசிக்கும் ஒட்டகச்சிவிங்கி குடிநீருக்காக தினசரி நீர்

நிலைகளைத் தேடிச் செல்கிறது. தண்ணீர் குடிக்கும் போதெல்லாம் தனது நீண்ட கால்களை அதிகமாகப் பரப்பி வைத்துக் கொண்டு 16 அடி உயரத்திலிருந்து தலையைக் குனிந்து நீர் குடிக்கிறது. மிகச் சிரமம் தான்!

◆ பசுவின் இருதயம் ஒரு நிமிடத்திற்கு 70 முறை துடிக்கிறது. யானையின் இருதயம் 25 முறை துடிக் கிறது. ஆனால், ஒட்டகச்சிவிங்கியின் இருதயமோ 150 முறை துடிக்கிறது.

◆ ஒட்டகச்சிவிங்கியின் நீளமான கழுத்தில் உள்ள ரத்தக் குழாய் வால்வுகள் வித்தியாசமாக செயல் படுகின்றன. அது தலையைத் தூக்கும் போதும் சரி, குனியும் போதும் சரி, மூளையிலிருந்து ரத்தம் திடீரென்று வருவதை இந்த வால்வுகள் தடுத்து விடுகின்றன. அதே போல மூளைக்கு திடீரென்று ரத்தம் செல்வதையும் தடுத்து விடுகின்றன.

◆ ஒட்டகச்சிவிங்கியை பொருத்த மட்டில் இந்தச் சிறப்பு அம்சங்கள் மிகத் தேவையாகும். ஏனென்றால் தண்ணீர் குடிக்கும் போதுதான் இது பெரும்பாலும் தாக்குதலுக்கு ஆட்படுகிறது. கால்களை அகட்டி வைத்து நீர் அருந்தும் போது கொடிய விலங்கு அதன் மீது பாய வந்தால் நேராக நிற்பதற்கே சில விநாடிகள் பிடிக்கும். அப்புறம்தான் ஓட முடியும்.

எனவேதான் நீர் பருகும் சமயத்தில், கஷ்டத்தைப் பார்க்காமல் அடிக்கடி, தலையைத் தூக்கி எதிரிகள் யாரேனும் வருகிறார்களா என்று சுற்றுப் புறத்தை நோட்டம் விடுகிறது.

◆ ஓர் ஒட்டகச்சிவிங்கி தண்ணீர் குடித்ததை ஒரு ஆய்வாளர் கண்காணித்தார். முதலில் அது 40 விநாடி குடித்தது. பின்னர் தலையைத் தூக்கிப் பார்த்தது. அப்புறம் 19 விநாடி, 17 விநாடி, 33 விநாடி, 7 விநாடி, கடைசியில் 20 விநாடி நேரம் குடித்தது. இதற்கு வசதியாத்தான் அதன் உடலில் அதிசயமான ரத்த ஓட்டமுறை அமைந்திருக்கிறது.

◆ பகலில் பெரிய ஒட்டகச் சிவிகங்களுக்கு எதிரிகளே இல்லை என்று சொல்லலாம். எதிரிகளிடமிருந்து தப்பிக்க வேண்டியிருந்தால் அதனால் மணிக்கு 65 கி.மீ வேக்த்தில் ஓட முடியும். பெரும்பாலான எதிரிகளின் வேகத்தை விட அதிகம் இருப்பதால் தப்பித்து விடும்.

◆ வலிமைமிக்க சிங்கம் கூட ஒட்டகச்சிவிங்கியைத் தாக்குவது என்றால் கொஞ்சம் இல்லை மிகவும் யோசிக்கும். காரணம், தனது வலிமையான கால்களால் ஒட்டகச்சிவிங்கி ஒரே உதை கொடுத்தால் போதும். மிகவும் வலிமை கொண்ட சிங்கம் கூடச் செத்து விடும். சிங்கத்திற்கே இந்த நிலை என்றால்

புலி, சிறுத்தைகளைப் பற்றி என்ன சொல்ல முடியும். அவைகள் ஒட்டகச் சிவிங்கி எதிரே வரும் போது மரியாதையாக ஒதுங்கியே போய் விடும்.

◆ ஒட்டகச் சிவிங்கியின் குட்டிகள் தான் பாவம். கொடிய விலங்குகளுக்கு அடிக்க பலியாக நேரிடு கின்றன.

◆ குட்டிகளில் பாதி ஆறு மாதம் முடிவதற்கு முன்பே மரணமடைகின்றன. தாய் ஒட்டகச்சிவிங்கி மட்டும் சிறிது ஏமாந்தால் இன்னும் ஏராளமான குட்டிகள் எதிரி விலங்கு களுக்கு இரையாக நேரிடும்.

◆ ஒரு கி.மீட்டர் தூரத்தில் உள்ள சிறு விலங்கு களைக் கூட தெளிவாக பார்க்கக் கூடிய ஆற்றல் பெற்றது ஒட்டகச்சிவிங்கி. வண்ணங்களை பகுத்துப் பார்க்கும் சிறப்பும் இந்த விலங்கிடம் உண்டு.

◆ எதிரி என்று வரும் சிங்கம், புலி என்றால் மூர்க்கத் தனமாக தாக்கி இறப்பிற்கு உள்ளாக்கி விடும்.

இரண்டு ஒட்டகச்சிவிங்கிகளுக்குள் மோதல் என்று வந்தால் கடுமையான சண்டைகள் ஏற்படாது.

◆ சிங்கம், புலிகளோடு மோதுவதைப் போல் மோதாது. வலிமையான கால்களைக் கூட பயன் படுத்தாது. நீண்ட கழுத்தை மோத வருவது போல் அப்படியும் இப்படியும் ஆட்டுவதோடு சரி, ஆனால்

இரு கழுத்துகளும் பலமாக மோதிக் கொள்வது கிடையாது. அந்தச் சண்டை என்பது போலியான ஒன்றாகத்தான் இருக்கும். எப்போதாவது அரிதாக உண்மையிலேயே சண்டை நடக்கும்.

◆ வெகு தூரத்திலிருந்து வேறு ஒரு புதிய ஆண் ஒட்டகச்சிவிங்கி வந்து விட்டால் அவ்வளவு தான். அங்கே போர் துவங்கி விடும். அப்போது, உலக்கைப் போன்ற நீண்ட கழுத்துகளை பயன்படுத்தும். தலை யால் பக்கவாட்டில் இடிக்கும். அவற்றின் மண்டை ஓடுகள் வலிமை மிக்கது. இருந்தாலும் பாதிக்கப் படுவது இல்லை.

◆ ஒட்டகச்சிவிங்கியின் தலையில் இரண்டு சிறு கொம்புகள் உண்டு. இவற்றைச் சுற்றி முடி மூடி யிருக்கும். கொம்பு என்றால் மாட்டிற்கு இருப்பது போல் கூர்மையானதாக இருக்காது. மொட்டை கொம்புகள்தான்.

நிஜ சண்டையின் போது இந்த மொட்டைக் கொம்பு களாலும் முட்டிக் கொள்ளும்.

◆ ஒட்டகச்சிவிங்கியின் கழுத்து நீண்டு உயர்ந்து இருப்பதால் அக்கழுத்தில் அதிகப் படியான எலும்புகள் இருக்கும் என்று எண்ணிவிடக் கூடாது.

சின்னக் கழுத்துள்ள விலங்குகளுக்கு எவ்வளவு எலும்புகள் இருக்குமோ அதே அளவில் ஒட்டகச்

சிவிங்கிக்கும் ஏழு எலும்புகள் தான் இருக்கும். ஆனால், பிற விலங்குகளின் எலும்பைக் காட்டிலும் இதன் எலும்புகள் நீளமானவையாக இருக்கும்.

◆ ஒட்டகச்சிவிங்கியின் உடலில் செம்பழுப்பு நிறத்தில் பட்டை பட்டையாய்ப் புள்ளிகள் இருக்கின்றன. இவற்றைச் சுற்றி வெளிர் நிறத்தில் கோடுகளும் உண்டு. இவை, எல்லா ஒட்டகச்சிவிங்கிகளுக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஒவ் வொன்றுக்கும் வேறுபாடு இருக்கும்.

◆ மனிதர்களில் கைவிரல் ரேகை அனைவருக்கும் ஒரே மாதிரி இருப்பது இல்லை. இதனால் விரல் ரேகையைக் கொண்டு ஒரு மனிதரை இன்னார் என்று அடையாளம் கண்டு கொள்வதைப் போல, ஒட்டகச் சிவிங்கியின் உடலிலுள்ள பட்டைப் புள்ளிகளை வைத்து ஓர் ஒட்டகச் சிவிங்கி மற்றொரு ஒட்டகச் சிவிங்கியை அடையாளம் கண்டு கொள்ளும்.

வலைபோல் தோற்றம் அளிக்கும் இந்தப் பட்டைப் புள்ளிகள் ஒட்டகச்சிவிங்கி பிறந்ததிலிருந்து இறக்கும் வரை மாறுவதில்லை.

◆ ஒட்டகச்சிவிங்கியின் பிரவசம் விசித்திரமான, அதிசயமான நிகழ்ச்சியாகும்.

நாயைப் போல, பூனையைப் போல பிரவக் காலங்களில் ஒட்டகச்சிவிங்கி மறைவிடம் தேடிப் போவது இல்லை. எந்த முன் ஏற்பாடுகளையும் செய்து கொள்வது இல்லை. இன்னும் சொல்லப் போனால், அப்படியொரு நிகழ்ச்சி நிகழப் போகிறது என்பதே தெரியாதது போலவே நடந்து கொள்கிறது.

தன் குட்டி இலகுவாக வெளியேற வேண்டுமே என்பதற்காக அது படுத்துக் கொண்டோ, உட்கார்ந்து கொண்டோ பிரசவிப்பது இல்லை.

சொன்னால் நம்புங்கள், ஒட்டகச்சிவிங்கி நின்று கொண்டுதான் பிரசவிக்கிறது. அத்துடன், பிரசவ வேதனை என்ற பெயரில் அதனிடமிருந்து ஒரு சின்ன முக்கலோ, முனகலோ, பெருமூச்சு கூட விடுவது இல்லை.

அது பிரசவத்தின் போது கவனிப்பது ஒன்றை மட்டும்தான். அக்கம் பக்கம் சிங்கம், புலி போன்ற கொடிய விலங்குகள் இருக்கிறதா? என்பதை மட்டும் தான்.

வயிற்றிலுள்ள குட்டியின் நீண்ட கழுத்து, அதே போன்று நீளமாக இருக்கும் முன்னங்கால்களை அழுத்திக் கொண்டிருக்கும். பிரசவத்தில் முதலில் கால்கள்தான் வெளியில் வரும். அதையடுத்து தலை, அப்புறம் நீண்ட உடல் வரும்.

◆ ஆறடி உயரமுள்ள குட்டி 'பொத்'தென்று தரையில் விழும். விழுகிற வேகத்தைப் பார்த்தால் பலமாக அடிபட்டு விட்டிருக்குமோ என்று தான் நினைக்கத் தோன்றும். ஆனால், அப்படியேதும் அடிபடுவதில்லை.

◆ ஒரு சில விநாடிகளில், குட்டி மெதுவாகக் கண்ணைத் திறந்து புதிய உலகத்தைப் பார்க்கிறது. புதிய காற்றைச் சுவாசித்தபடி சற்று நேரம் அப்படியே சுருண்டு கிடக்கும்.

பிறகு தள்ளாடி தள்ளாடி தடுமாறி மெல்ல எழுந்து நிற்க முயற்சி செய்யும். இந்த நிலைக்கே ஐந்து, ஆறு நிமிடம் ஆகும். சில குட்டிகள் அரைமணி நேரம் எடுத்துக் கொள்வதும் உண்டு. மெலிந்த நீண்ட கால் களால் எழுந்து நின்றதும், தள்ளாடியபடியே நடக்க முயற்சி செய்யும். வெகு விரைவிலேயே தள்ளாட்டம் நீங்கி தாயை நோக்கி முதல் அடி வைக்கும்.

◆ அதுவரை தன் பிறந்த குட்டியையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த தாய் ஒட்டகச்சிவிங்கி தலையைக் குனிந்து ஈரம் உலராத குட்டியின் உடலை நாவினால் அன்புடன் நக்கிக் கொடுக்கும். குட்டியை பாசத்துடன் முகர்ந்து பார்க்கும்.

◆ தாயை நோக்கிச் சென்ற குட்டி முதல் முதலில் பால் குடிக்கத் தொடங்கும்.

பால் குடித்த சில மணி நேரத்தில் அது மகிழ்ச்சி யோடு துள்ளியோடும். தாயைச் சுற்றி சுற்றி குதித்து விளையாடும்.

◆ குட்டிக்கு வளர்ச்சி அதிகம். ஒரே வருடத்தில் 12 அடி உயரம் வளர்ந்து விடும். அதாவது, பிறந்த போது இருந்ததை விட இரு மடங்கு உயரும். மூன்று ஆண்டுகளில் பெரிய ஒட்டகச்சிவிங்கியின் உயரத்தை எட்டி விடும்.

◆ மிக உயரமான உடல் இருந்தும் ஒட்டகச் சிவிங்கி ஊமை விலங்கு தான். எப்போதாவது அரிதாக உறுமும். அது கூட முனகல் மாதிரி கேட்கும். இருந்த போதிலும் ஆபத்து காலங்களில் சிக்கிக் கொண்ட குட்டிகளின் கதறலில் மட்டும் ஒலி இருக்கும்.

◆ நீண்ட கழுத்தையும் உயரத்தையும் பெற்றுள்ள ஒட்டகச்சிவிங்கி எப்படித் தூங்கும்? தூங்கும் போது அதன் கழுத்தை எப்படி எங்கே வைத்துக் கொள்ளும்..? இப்படி சிலருக்கு ஐயம் எழலாம்.

அதனால் நின்று கொண்டும் தூங்க முடியும். படுத்துக் கொண்டும் தூங்க முடியும். சில விநாடிகள் தூக்கம் தான். ஆழ்ந்த நீண்ட நேரம் தூங்காது.

◆ உட்கார்ந்தபடி தூங்கும் போது கழுத்தைப் பின் புறம் திரும்பிப் பார்க்கும். அப்புறம் இங்கும் அங்குமாக

நோட்டம் விடும். ஆபத்து ஏதும் இல்லை என்று அறிந்து கொண்ட பிறகே கண்களை மூடுகிறது. அப்போது, தலையை பின்புறத்தில் பிட்டத்தில் வைத்துக் கொள்ளும்.

◆ ஐந்து நிமிடம் தான் தூங்கும். பிறகு விழித்துக் கொள்ளும். இரவில் அலையும் கொடிய விலங்கு களால்தான் அதனால் நீண்ட நேரம் தூங்க முடிவ தில்லை.

◆ ஒரு முழு இரவில் ஒட்டகச்சிவிங்கி தூங்கும் மொத்த நேரம் அரை மணி அளவு தான் அதனால் ஆழ்ந்து தூங்க முடிகிறது.

◆ 'ஆக்ஸ்பெக்கர்' என்று ஒரு சிறு பறவை. இது மரங்கொத்தி பறவையைப் போல இருக்கும். ஒட்டகச் சிவிங்கியின் முதுகு தான் இப்பறவையின் வாழுமிட மாகும். அங்குள்ள அட்டை போன்ற பூச்சிகளைக் கொத்திப் பொறுக்குவது தான் அதன் பணியே!

◆ ஒட்டகச்சிவிங்கிக்கு ஆபத்து வருவது தெரிந் தால் இந்தச் சின்னப் பறவை சத்தம் போட்டுக் கத்தும். அப்போது தூங்கிக் கொண்டு இருக்கும் ஒட்டகச் சிவிங்கி விழித்துக் கொள்ளும். ஆபத்து வருவதற்கு முன்னால் நாலு கால் பாய்ச்சலில் தப்பி ஓடி விடும். இப்படி அச்சிறு பறவையும் ஒட்டகச் சிவிங்கியும் நட்போடு உதவிக் கொள்கின்றன.

◆◆◆



# சிங்கம்

■ **சி**ங்கம் இரையைத் தாக்கும் போது ஒரே முன்னங்காலால் மட்டும் தாக்கும்.

■ சிங்கத்திற்கு எப்போதும் தனியாக இருக்கப் பிடிக்காது. எங்கு சென்றாலும் தன் குடும்பம் அனைத்தையும் கூடவே அழைத்துக் கொண்டு செல்லும், ஆண் சிங்கமும், பெண் சிங்கமும் சேர்ந்தே தான் வேட்டையாடும்.

■ மிகவும் சிறிய இதயம் கொண்ட விலங்கு சிங்கம் தான்.

■ சிங்கம் ஒரே பாய்ச்சலில் 20 அடி தூரம் வரையில் தாண்டும்.

■ புலியும், சிங்கமும் ஒரே காட்டில் வாழ்வது இல்லை.

■ சிங்கத்தின் கர்ஜனையை பத்து மைல் தொலை விற்கு கேட்க முடியும்.

■ சிங்கம் சமவெளிகளில்தான் வாழும். ஒரு மந்தைக்கு ஒரு ஆண் சிங்கமும், பல பெண் சிங்கங் களும், பல குட்டிகளும் இருக்கும்.

■ சிங்கம் ஒரு சேம்பேறி மிருகம். நாள் முழுவதும் தூங்கிக் கொண்டேயிருக்கும். ஆம், ஆண் சிங்கம் ஒரு நாளைக்கு 20 மணிநேரம் தூங்குகிறது.

■ சூரியன் மறையும் நேரத்தில்தான் சிங்கம் தூக்கத்தை விட்டு, கொட்டாவி விட்டபடியே வேட்டைக்குப் புறப்படும்.

■ சிங்கத்திற்குப் பிடித்தமான உணவு எவை தெரியுமா? கோவேறு கழுதைகளும், காட்டெரு மைகளும் தான்.

■ வேட்டை ஆடுவதில் ஆண் சிங்கத்தை விட பெண் சிங்கமே சிறந்து விளங்குகிறது.

■ ஆண் சிங்கத்தின் எடை சுமார் 500 பவுண்டு வரை இருக்கும்.

■ பல நேரங்களில் ஆண் சிங்கம் வேட்டையில் ஈடுபடாது. அந்த வேலையைப் பெண் சிங்கங்கள் தான் பெரும்பாலும் செய்யும். ஆண் சிங்கம் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும்.

■ பெண் சிங்கம் வேட்டையாடி ஒரு மிருகத்தைக் கொன்றாலும் அந்த இறையை ஆண் சிங்கத்திடம் இழுத்து வந்து விடும். முதல் சாப்பாடு ஆண் சிங்கத் திற்குத்தான் நடக்கும்.

■ மூன்று வயதான பின்புதான் ஆண் சிங்கங்களுக்கு பிடரி மயிர் முளைக்கும்.

■ உருவத்தில் தன்னை விட எவ்வளவு பெரிய மிருகமாக இருந்தாலும் சரி, உடல் பலத்தில் எவ்வளவு பெரிய பலசாலியாக இருந்தாலும் சரி, அதையெல் லாம் ஒரு நொடியில் அடித்து வீழ்த்தி செயல் இழக்கச் செய்ய சிங்கம் முதலில் என்ன செய்யும் தெரியுமா?

■ எடுத்தஎடுப்பிலேயே எதிரியின் குரல் வளையைக் கவ்வி குதறி குரல் வளையைத் துண்டித்து முதலில் உயிர் மூச்சை அடக்குவது தான். இதில் வரிக்குதிரை யும் அடங்கும், யானையும் அடங்கும்.

■ சிங்கத்தின் முகத்தில் இரு பக்கங்களிலும் சில புள்ளிகள் இருக்கும்.

இவை ஒரே மாதிரியாக இல்லாமல், ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு விதமாக இருக்கும்.

தவிர, ஒரு சிங்கத்திற்கு உள்ளதைப் போன்று மற்றொன்றிற்கு இருக்காது. நமக்கு கைரேகையைப் போல இவற்றில் இந்தப் புள்ளிகள்.

ஆண் சிங்கத்திற்கு உள்ளதற்கு எதிரிடையாக இந்தப் புள்ளிகளின் அமைப்பை பெண் சிங்கம் பெற்றிருக்கின்றன.

■ சிங்கம், புலி, போன்ற ஊனுண்ணிகள் உப்பை விரும்புவதில்லை. ஏனெனில் இவை அடித்துத் தின்னும் விலங்குகளின் இறைச்சியில் போதுமான அளவு உப்பு உள்ளது. ஆனால், தாவர உண்ணி களுக்கும் மற்றும் மனிதன் உயிரிகளுக்கும் உப்பு மிகவும் அவசியமாகிறது. எனவே அவை உப்பைப் பெரிதும் விரும்புகின்றன. வீட்டில் நாய் வளர்ப் பவர்கள் அதற்கு உணவாக அளிக்கும் இரைச்சியில் உப்புச் சேர்க்காமலே போடுவதை நீங்கள் பார்த் திருக்கலாம்.

■ சிங்கத்தின் பாலை தங்கக் கிண்ணத்தைத் தவிர வேறு எதில் வைத்தாலும் கெட்டு விடும்.

■ சாதாரணமாக ஒரு சிங்கத்தின் நீளம் 9 அடி இருக்கும். வால் மட்டும் 3 அடி இருக்கும். உயரம் 31/2 அடி இருக்கும். எடை 550 பவுண்டு இருக்கும்.

■ ஆண் சிங்கத்தை விட பெண் சிங்கம் கொஞ்சம் சிறியதாக இருக்கும். இது பழுப்பு நிறமுடையதாக இருக்கும்.

■ ஆண்சிங்கத்தின் பிடரி, கறுப்பு மற்றும் பழுப்பு நிறத்தில் இருக்கும்.

■ சில மாநிலங்களில் உள்ள ஆண் சிங்கங்களுக்கு (பிடரி) மயிர்கள் இருப்பது இல்லை.

■ சிங்கம் தனக்கு நிகரான ஆண் சிங்கத்திற்கு போரிட்டு வென்றதும் அதன் குடும்பத்தைத் தன் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வந்து விடுகிறது.

■ சிங்கம் 12 அடி உயரத்திலும் 40 அடி பள்ளத்திலும் தாவக் கூடியது.

■ புலால்களைத் தின்னும் சிங்கம் சில நேரங்களில் கீழே விழும் பழங்களையும் தின்னும்.

■ பொதுவாக சிங்கங்கள் மான்களையும் வரிக்குதிரை, வயல்எலி, யானை, ஒட்டகச் சிவிங்கி எருமைகள் மற்றும் ஆஸ்ட்ரிக் எனும் பறவையையும் வேட்டையாடும்.

■ சிங்கங்கள் இரண்டு வயது முதல் குட்டிப் போடத் தொடங்கி 5 வயது வரை குட்டி போடுகின்றன.

■ பெண் சிங்கம் கருவுற்ற பின் 105 முதல் 112 நாள்களில் 2 முதல் 5 குட்டிகள் வரை போடுகிறது.

■ 6 நாள்களில் குட்டிகள் கண் திறக்கும். மூன்று மாதம் வரை தாய்ப்பால் குடிக்கும். ஒரு வருடத்திற்குப் பின் குட்டி வேட்டைக்குத் தனித்து செல்லும்.

■ சிங்கத்திற்கு எதிரிகள் என்று எந்த விலங்குகளும் இல்லை. மனிதன், மனிதன் மட்டுமே எதிரி.

இந்த நிலை என்று மாறுமோ...?






● நாய்க்கு வியர்வைச் சுரப்பிகள் இல்லை. அதனால், தன் உடல் வியர்வையை எல்லாம் நாக்கின் வழியே வெளியேற்றுகிறது.

● நாயின் நாக்கு நீளமானது. அதைக் கொண்டே தன் உடலை எப்போதும் தூய்மையாக வைத்துக் கொள்கிறது.

● ஒரு நாயை அடிக்காமல் விஷம் வைக்காமல் இறக்கடிக்க வேண்டுமானால் அதை தூங்க விடாமல் ஐந்து நாள் செய்தரல் போதும் இறந்து விடும்.

● ஸ்ர்பீ என்ற ஒரு நாய் வகை சீனாவில் உள்ளது. இந்த வேட்டை நாயின் உடல் வேட்டையாடும் போது விறைத்துக் கொண்டும் சாதாரண நேரங்களில் மடிப்பு மடிப்பாக சதை தொங்கும்படியாகவும் இருக்குமாம்.

● ஒரு வேட்டைநாயின் அளவு இது. நீளம் 61/2 அங்குலம். உயரம் 51/2 அங்குலம். இந்த உலகிலேயே சிறிய நாயான இதன் பெயர் தம்பெலினா என்பதாகும்.

● ஜெர்மனியின் 'டாபர்மேன்' நாய் தான் உலகப் புகழ் பெற்றதாம்.

● நாய்கள் தரையில் மறைந்த குற்றவாளிகளை மட்டும் பிடிக்கும் என்று எண்ணவேண்டாம், தண்ணீரில் இருந்தாலும் கண்டு பிடிக்கும் ஆற்றல் கொண்டதாம்.

● நாய்களுக்கு பயிற்சி அளிக்கும் நிறுவனம் ஒன்று கலிபோர்னியாவில் உள்ள சான்டோரோசா என்ற இடத்தில் இயங்கி வருகிறது.

● மனிதர்களை விட பத்து மடங்கு கேட்கும் சக்தியும், மோப்ப சக்தியும் நாய்களுக்கு உண்டு.

● நாய், ஓநாயின் இனம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

• ஆஸ்திரேலியாவில் உள்ள டிங்கோ எனும் வகையைச் சேர்ந்த நாய்க்கு குரைக்கத் தெரியாது.

• இன்று அந்தமானில் மனிதர்களை விட நாய்கள் அதிகமாக வாழ்கின்றன. இங்கே முதன் முதலாக பர்மாவில் இருந்துதான் நாய்கள் கொண்டு வரப்பட்டனவாம்.

• ஆண்டுதோறும் சுமார் 25,000 பேர் வெறி நாய்க் கடியினால் மாண்டுபோகிறார்கள். எந்த நாட்டில்? நம் நாட்டில் தான்.

'லாஸி' என்ற பெண் நாயின் வாழ்க்கை வரலாறு முதன் முதலாக 'LASSLE A DOGS LIFE THE FIRST 50 YEARS' என்ற பெயரில் வெளி வந்துள்ளது.

• சில காட்டில் வாழும் ஆதிவாசிகள் தங்கள் குழந் தைகளுக்கு வளர்ப்பு நாய்களின் பாலை கொடுக்கி றார்கள்.

• நாய் தூங்கும் போது கூட எச்சரிக்கையாகத் தூங்கும். ஆமாம், காற்று வீசும் எதிர்திசை நோக்கியே தன் தலையை வைத்துத் தூங்குவதால்தான் எதிரிகளி டமிருந்து எளிதாக தப்பித்துக் கொள்கிறது.

• ஒரே நேரத்தில் நாய் இரண்டு கண்களாலும் வேறு வேறு பொருள்களைப் பார்க்கும் ஆற்றல் பெற்றுள்ளன.

● சிப்பிப்பாறை என்ற நாய் வேட்டை நாயாகவே மட்டும் பயன்படுத்தப்படுகிறது. இவற்றின் கால்கள் நீண்டும், வலிமையோடு இருப்பதாலும் எளிதாக எதிரிகளை தாக்குமாம்.

● நாய்களின் வாழ்நாள் பதினைந்து ஆண்டுகள்.

● உலகம் முழுவதும் உள்ள ஒரே விலங்கு நாய் தான்.

● 'விப்பெட்' என்ற வேட்டை நாய் மணிக்கு 35.5 மைல் வேகத்தில் ஓடும்.

● பிறந்த ஆறு மாதத்திற்குள் நாய்க்குட்டிகள் 32 தற்காலிகப் பற்களையும் இழந்து விடுகின்றன. பின்பு புதிதாக 42 நிரந்தரப் பற்கள் முளைக்கின்றன.

● நாய்க்கு இதயத் துடிப்பு ஒரே சீராக இருக்காது. 70 முதல் 120 வரை மாறுபடும்.

● நாய்களால் வண்ணங்களை வேறுபடுத்திப் பார்க்க முடியாதென்று நீண்டகாலமாக நம்பி வந்தனர். கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் நடந்த ஆய்வின் படி நாய்களால் கறுப்பு, வெள்ளை ஆகிய நிறங்களை மட்டுமே வேறுபடுத்தி அறிய முடியும் என்று தெரிய வந்துள்ளது. மற்றபடி மஞ்சள், பச்சை ஆரஞ்சு போன்ற நிறங்களை நாய்களால் இந்த ஆய்வின் போது வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லையென்று தெளிவாகி உள்ளது.

● தங்களுக்கு நோய் வராமல் பார்த்துக் கொள்வதில் நாய்கள் எச்சரிக்கையாக செயல்படுகின்றன.

உதாரணமாக நாய்கள் தனக்குக் கிடைத்த உணவை சாப்பிடும் போது அத்துடன் தேவையற்ற செரிக்காத பொருள்கள் உணவுடன் வயிற்றுனுள் சென்று சில சமயம் உபாதைகள் ஏற்படுத்தும்.

இதைப் போக்கிக் கொள்ள நாய்கள் நுணாச் செடியில் உள்ள இலைகளை 'மடக்மடக்' என்று ஆடு தின்பது போல தேவையான அளவு கடித்துத் தின்னுமாம். அன்று முழுவதும் வேறு உணவு சாப்பிடாமல் சோர்வாக படுத்திருக்கும். பிற்பாடு அதற்கு பேதி ஆகும். அதனுடன் தேவையில்லாத பொருட்கள் வெளியேறி வயிற்றை சுத்தப்படுத்தும். பிறகே நாய் பழைய நிலைக்கு வரும்.

● மேலும், நாய்க்கு வயிற்றில் சூடு அதிகமாகி விட்டால் வேறு ஏதாவது வயிற்று பிரச்சனைகள் ஏற்பட்டால் அருகம்புல்லை திண்கிறது. அருகம்புல் வயிற்றிலுள்ள உஷ்ணத்தை போக்கி பூச்சிகளையும் அழிக்கிறது. பின் அருகம்புல்லை வாந்தி எடுப்பது போல் வெளியேற்றி விடும்.

● இத்தோடு, நாய்களுக்கு உடலில் உண்ணி, பூச்சிகள் அதிகமாகி விட்டால் 'நாய் துளசி' என்ற செடி

மீது விழுந்து புரளும். இதனால் உடல் பூச்சிகள் அழிந்து விடுகின்றன.

● பிரெஞ்சு மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு மேலாக நாய்களை நேசிக்கிறார்கள். அதனால் தான், அவர்கள் வளர்க்கும் நாய்கள் இறந்து விட்டால் அவை களுக்கு என்று கல்லறையே கட்டி வழிபடுகிறார்கள்.

● நாய்களுக்கு பொது கழிப்பிடங்களை நிறுவி வைத்து இருப்பவர்கள் பாரீஸ் நகர மக்கள்.

● பாகிஸ்தானியர் கரடிக்கும், நாய்க்கும் பந்தயம் கட்டி சண்டையே நடத்துகிறார்கள்.

● ஜப்பானியர் நாய்களுக்கென்றே உணவகங்களை நடத்தி வருகிறார்கள்.

● பிரிட்டானியர்கள் தங்கள் குழந்தைகளின் பராமரிப்புச் செலவை விட நாய்களுக்கு செய்யும் செலவு அதிகம்.

● சுவிஸ் நாட்டில் நாய்களை ஓட்டப் பந்தயங்களில் ஈடுபடுத்துகிறார்கள்.

● தென்கொரிய நாட்டு மக்கள் நாய்கறியையும், அதன் சூப்பையும் விரும்பி சாப்பிடுகிறார்கள்.

● ஜப்பானில் நாய்களுக்குக் கூட வங்கிகளில் சேமிப்புக் கணக்கு உண்டு.

• ஜப்பானில் நாய்களுக்கு உடை அலங்காரக் கடைகளே உண்டு.

• இந்தோசீன மக்கள் நம்பிக்கை கொஞ்சம் வித்தியாசமானது. இங்குள்ள மோய்கள் எனப்படும் மலைவாசிகள் நாய்களைத் தங்கள் முன்னோர்களாக வழிபடுகின்றனர்.

• ஐரோப்பியர்கள் தங்கள் வளர்ப்புச் செல்வங்களை வெளியே அழைத்துச் செல்ல தனியாக கார்களே வைத்திருக்கிறார்கள்.

• இந்தியாவில் நாய்களுக்கு காப்பகங்கள் இருக்கின்றன.

• நாய்களின் பெருக்கத்தைக் குறைக்க சீனாவில் உறுதி உள்ளவர்கள் மட்டுமே வளர்க்க வேண்டும் என்று சட்டம் இயற்றி இருக்கிறார்கள்.

• நாய்கள் நம் நாட்டில் மனிதர்களை கடித்தால் அதன் உரிமையாளர் கண்டு கொள்ளப்படுவது இல்லை. ஆனால் அமெரிக்காவில் இப்படி அல்ல. ஒருவரின் வீட்டு நாய் மற்றவரை கடித்துவிட்டால் 186 டாலர் தண்டம் கட்ட வேண்டும் என்பதோடு அவரின் மருத்துவச் செலவையும் ஏற்க வேண்டும்.

• தமக்கு காவல் தெய்வமாக நாயை கிரேக்கர்கள் கருதினார்கள்.

● ரஷ்ய மக்கள் தாங்கள் வளர்க்கும் செல்ல நாய்களுக்கு இருக்கும் நீண்ட முடிகளைக் கொண்டு வகை வகையான முடி அலங்காரம் செய்து அழகு பார்க்கிறார்கள். நாய்களுக்கென்று அந்நாட்டில் அழகு நிலையும் இருக்கிறதாம்.

● உத்திரபிரதேச மக்கள் கொஞ்சம் வேறுபட்டவர் களாக நடந்து கொள்கிறார்கள். இவர்கள் நாய்களுக்கு ஆட்டுக்கறி யோடு விருந்து கொடுத்தால் மழை வரும் என்று நம்பி 200, 300 நாய்களுக்கு ஏகபோகமாக விருந்தளிக்கிறார்கள்.

● நியூசிலாந்து நாட்டில் நாய் வளர்ப்பவர்கள் ஒரு நாளில் ஒரு முறையாவது அவைகளை வெளியே அழைத்துச் செல்ல வேண்டும் என்பது சட்டமாகவே உள்ளது.

● ஆப்பிரிக்காவில் உள்ள காட்டு நாய்களைப் பற்றி அறிதல் சுவாரசியமான ஒன்றாகும்.

● ஆப்பிரிக்காவின் இன்றைய காட்டு நாய்களின் மூதாதையர்கள் நரிகளும், ஓநாய்களும்தான்!

இந்தப் பரிணாம மாற்றம் மூன்று மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நடந்திருக்கிது. புதை படிவங் களை ஆராய்ந்து ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கும் செய்தி இது:

காட்டு நாய்களின் வாழ்க்கை முறைகளை ஆய்வு செய்ய ஃபிராங் ஃபர்ட் ஜூவாலஜிகல் சொசைட்டி யின் நிதி ஆதரவில் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றவர்கள் லெஸ்லி பாக்ஸ் என்ற பெண்மணியும் அவரது கணவர் டிக்கோ மக்நட்டும். பத்தாண்டு களுக்கும் மேல் இவர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சி களைத் தொகுத்து (RUNNING WILD DISHELLINGT THE MYTHS OF THE AFRICAN WILD DOG) என்ற சிறப்பான புத்தகத்தை வெளியிட்டு இருக்கிறார்கள்.

- ஒரு காலத்தில் சகாராவின் விளிம்புப் பகுதிகளிலும் பிற இடங்களிலும் இலட்சக்கணக்கில் கூட்டம் கூட்டமாய் அலைந்து திரிந்த இந்தக் காட்டு நாய்களின் இன்றைய மொத்தத் தொகை வெறும் 5000 தான்.

பெயர் தான் காட்டு நாய்களே தவிர இவை காடுகளிலோ, பாலைவனப் பகுதிகளிலோ வசிப்ப தில்லை. இந்த மீதமிருக்கும் 5000 காட்டு நாய்களும் போட்ஸ் வானா பகுதியிலிருக்கும் ஓகவாங்கோ டெல்டா பிரதேசத்தில் வளைய வருகின்றன. இந்த டெல்டா பிரதேசம் 6200 சதுர மைல் பரப்புள்ளது. முழுவதுமே மணல் திட்டுகளோடு அவ்வப்போது வெள்ளம் வந்து வடியும் சமவெளி பிரதேசம்தான்.

இப்பகுதியில் கூட்டம் கூட்டமாய் அலைந்து திரியும் காட்டு நாய்கள் மனிதர்களை அடித்துத் தின்னும் என்ற எண்ணம் ஒரு காலத்தில் இருந்தது.

ஆனால், அது உண்மைக்குப் புறம்பானது என்கிறார்கள் இந்த ஆய்வு செய்த தம்பதியினர்.

உண்மையில் இந்த நாய்கள் வேட்டையாடி உணவாக உட்கொள்வது அங்கிருக்கும் மான்களைத் தான்.

- நன்கு வளர்ந்த நாய்கள், மான் இறைச்சியை தங்கள் வாயில் வைத்து நன்றாகக் கடித்துப் பக்குவப் படுத்தி அப்படியே கொண்டு வந்து குட்டி நாய்கள் வாயில் வைத்து ஊட்டுகின்றன.

- நில நடுக்கம் ஏற்படுவதை நாய்களின் போக்கைக் கொண்டு அறியலாம். நில நடுக்கம் ஏற்படுவதற்கு முன் நாய்கள் காரணமின்றி குறைக்கும்.

- வ்ானிலையில் ஏற்படக்கூடிய மாறுதல்களை அறிவியல் கருவிகளை விட நாய்கள் எளிதில் உணர்ந்து விடும். நாய்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தால் மழை வரும் என்று திட்ட வட்டமாகச் சொல்லலாம்.

- நாய்க்கு பெரிய முகர்ச்சி மொட்டு வாசனையை

வேகமாகவும், சரியாகவும் தெரிந்து கொள்ள உதவு கிறது. மற்ற பிராணிகளிலிருப்பதை விட நாய்களின் முகர்ச்சி மொட்டுகள் மிகப் பெரியதாகவும் நன்கு வளர்ச்சி பெற்றுமுள்ளன. ஆகையால், நாய்கள் வாச னையை வேகமாகவும், நுட்பமாகவும் அறிகின்றன. நாய்கள் தூரமான இடத்திற்குச் செல்லும் போது வழியிலுள்ள கல், மரம் போன்ற பொருள்களின் மீது சிறு நீரைக் கழிக்கின்றன. திரும்பி வரும் போது நுகரும் சக்தியால் முன்பு சிறுநீர் கழித்த பகுதியை முகர்ந்து தான் சென்ற பாதையை அறிந்து பழைய இடத்திற்கு வந்து சேர்கின்றன.

- காட்டு நாய்களுக்கு குரைக்கத் தெரியாது என்பது ஒரு சுவையான செய்தியாகும். ஆதிகால மனிதர் களால் பழக்கப்பட்ட நாய்கள் குரைக்கக் கற்றுக் கொண்டன. மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்வதைப் பார்த்தே இந்த நாய்களுக்கு குரைக்கும் பழக்கம் ஏற்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.



# ஓநாய்



- ஓநாய், இது நாய்க் குடும்பத்தைச் சேர்ந்தவை. இரண்டு கோடி ஆண்டுகளுக்கு முன் இவற்றின் எண்ணிக்கை மிகப் பெரும் அளவில் இருந்திருக்கிறது.

தற்போது, சிவப்பு ஓநாய் சாம்பல் நிற ஓநாய் என இரண்டு வகையே உள்ளன.

சிவப்பு நிற ஓநாய், சாம்பல் நிற ஓநாயை விட சிறியது. 15 கிலோ எடையுள்ளது. ஐக்கிய நாட்டின் வட, தென் பகுதிகளில் வாழ்கின்றன.

சாம்பல் நிற ஓநாய் அளவில் பெரியது. 95 கிலோ

எடையிருக்கும். இரண்டு மீட்டர் நீளமுள்ளது. வட அமெரிக்கா, வட ஐரோப்பா ஆசிய நாடுகளில் வாழ்கின்றன. இவை பார்ப்பதற்கு அல்ஷேசன் நாயை போல் இருக்கும்.

● ஓநாய்கள் அறிவு நுட்பம் கொண்டவை. இவை தனக்கென்று வேட்டையாட ஒரு எல்லையைத் தேர்ந்தெடுக்கும். பின் தனது சிறுநீரினால் அந்தப் பரப்பிற்கு எல்லைக்கோடு போடும். மேலும் எல்லையில் கொம்புகள், கற்களை நடும். பின் கவனமாக எல்லையைப் பாதுகாக்கும்.

● இது தன் உணவாக குழிமுயல், அணில், எலி, மான், குதிரை போன்றவற்றைக் கொள்கிறது.

வேட்டையாடும் போது கொடூரமாகத் தோற்றமளிக்கும். இவை தன் குடும்ப வாழ்க்கையில் மிகவும் அன்பும், பண்பும், பாசமும் கொண்டவையாக இருப்பதோடு, ஒருவனுக்கு ஒருத்தி என்ற கற்பு நிலையோடு ஓர் ஆண் ஓநாய் ஒரே ஒரு பெண் ஓநாயுடன் மட்டுமே வாழ்நாளில் வாழ்கிறது.

இவை ஜனவரி முதல் மார்ச் வரை இனப் பெருக்கில் ஈடுபடுகின்றன. இவற்றின் குட்டிகள் வயிற்றில் 63 நாள்கள் இருக்கும். பிறகு 5 முதல் 14 குட்டிகளைப் போடுகின்றன.

பிறந்த குட்டிகள் 5 முதல் 9 நாள்களில் கண்களைத் திறந்து உலகைப் பார்க்கும். ஒன்றரை வருடங்களுக்குப் பின் இவை முழு வளர்ச்சியடையும். மூன்று வயது ஆகும் போது தனக்கு இணை சேர்த்துக் கொண்டு பெற்றோரை விட்டுத் தனித்து வாழத் தொடங்கும்.

தற்போது ஓநாய்கள் கனடா, அலாஸ்கா போன்ற இடங்களில் வாழ்கின்றன.





# முள்ளம் பன்றி

• உருவத்தில் பெரியதும், வலிமையில் அதிகமும் பெற்ற யானையையே புலி எதிர்க்கும்.

ஆனால், அதே புலியே தன்னைவிட சிறிய ஜீவனாகிய முள்ளம் பன்றியைக் கண்டால் வழிவிட்டு நின்று விடும்.

காரணம் என்ன? முள்ளம் பன்றியின் உடல் முழுவதும் காணப்படும் முட்களால் தான். அப்படி என்ன அந்த முட்களில் இருக்கிறது? முள்ளம் பன்றியின் உடலில் இருக்கும் முட்களுக்கு இருக்கும் விஷத்தன்மை அதிகம்.

- முள்ளம் பன்றி, இந்தியாவைத் தாயகமாக கொண்டது.

- இது வருடத்தில் ஒருமுறை குட்டி ஈனும் - ஒன்று முதல் நான்கு வரையிலான குட்டிகளை ஈனும்.

- அது பிறக்கும் போது முதுகில் முட்கள் இருப்பது இல்லை. குட்டிகள் இரண்டு, மூன்று ஆண்டுகள் வளர்ந்து பெரிதானதும் முட்கள் வளர்கின்றன.

சதாரணமான நேரங்களில் முதுகில் ஒட்டிக் காணப்படும் முள்ளம் பன்றியின் முட்கள், தனக்கு ஆபத்து வரும் சமயங்களில் போர் வீரனைப் போல விரைத்துக் கொண்டு பயங்கரமாக காட்சியளிக் கின்றன.

- இவை எந்த மிருகத்தைக் கண்டும் அச்சப் படுவதோ, பயந்து இருப்பதோ கிடையாது.

- அதே போல் எந்த விலங்கும் இதனோடு மோத வருவதும் இல்லை.

ஒருவேளை மோதவேண்டிய நிலை ஏற்பட்டால் எதிரியை மையமாக வைத்து முள்ளம் பன்றிகள் தங்களது உடலை குறுக்கி ஒரு சிலிர்ப்பு சிலிர்க்கும். அவ்வளவு தான், அம்பை விட வேகமாக முட்கள் வீர்ரென்று கிளம்பி எதிரியின் உடலைத் தைத்து விடும்.

- ஒன்றுக்கு அதிகமான முட்கள் ஒரு விலங்கின் உடலில் தைத்துவிட்டால் விலங்கு இறப்பது நிச்சயம்.

அந்த அளவிற்கு விஷத்தன்மை கொண்டவை முள்ளம் பன்றியின் முட்கள்.

- முள்ளம் பன்றியின் விருப்பமான உணவு வயலில் மேயும் எலிகள் தான். பயிர்களின் எதிரியான எலிகளை முள்ளம் பன்றி ஒழிப்பதனால், விவசாயிகளின் தோழன் என்று கூட இதைச் சொல்லலாம்.

- வட இந்தியாவில் வாழ்கின்ற சில பழங்குடியினர் முள்ளம் பன்றியை வேட்டையாடி உணவாக உண்கிறார்கள்.

- நில நடுக்கம் ஏற்படுவதை முன்கூட்டியே அறியும் ஆற்றல் பன்றிக்கு உண்டு. அந்த நேரங்களில் பன்றி தன் இருப்பிடத்தை உடைத்துக் கொண்டு வெளியேறும்.

- வானிலையில் ஏற்படக் கூடிய மாறுதல்களை பன்றி எளிதில் உணர்ந்து கொள்ளும். பன்றிகள் வடக்கு நோக்கி சுவர்ப்புறம் ஒதுங்கினால், நல்ல வானிலை அமையுமெனவும், தெற்கு நோக்கி ஒதுங்கினால் மழை வருமெனவும் கூறப்படுகிறது.

- பன்றிகளை அடிக்கடி செல்லமாகத் தட்டிக் கொடுப்பதால் அதன் இரத்த அழுத்தம் அதிகமாகி,

அதன் செக்ஸ் உணர்வு குறைந்து போகிறதாம். இது ஆஸ்திரேலியாவின் கான்பெர்ரா நகரிலுள்ள பன்றிகள் ஆய்வு கவுன்சிலின் கண்டுபிடிப்பு.

● பன்றி இனத்தில் இரட்டைத்தலைப் பன்றிகள் எப்போதாவது விநோதமாகப் பிறப்பதுண்டு. ஆனால், உயிரோடு இருப்பதில்லை. ஸ்காட்லாந்தில் சென்ற ஆண்டு பிறந்த ஓர் இரட்டைத்தலைப் பன்றி இன்னும் உயிருடன் ஆரோக்கியமாக இருக்கிறது. இப்போது அதன் எடை 68 கி.கி. அண்மையில் லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள பன்றிப் பாதுகாப்புக்கு இந்த அதிசயப்பன்றி விற்கப்பட்டது.

● மேலை நாடுகளில் மாமிசத்திற்காக வெள்ளைப் பன்றிகள் வளர்க்கப்படுகின்றன. புர்ராணத்தில் சிவனின் அடிமுடி காண விஷ்ணு வெள்ளைப் பன்றி உருவெடுத்து பாதாளத்தை அகழ்ந்தார் என்கிறது புராணம்.

ஆனால் மனிதர்கள் அதைக் கொன்று தின்று முடிக்கிறார்களே?....

# குரங்குகள்



## சிம்பன்சி

- குரங்கு இனங்களில் சிம்பன்சியும் ஒரு வகை.

- சிம்பன்சிகள் பாதி நாளுக்கு மேல் தன் வாழ்நாளை மரத்திலேயே செலவிடுகின்றன.

- இரவில் சாதாரணக் குரங்குகளைப் போல் மரக்கிளையில் உட்கார்ந்து இவை தூங்குவதில்லை. மாறாக சிறு கிளைகள், சுள்ளிகள், இலைகளைக் கொண்டு மரத்தின் மீது ஒரு மெத்தையை உருவாக்கு கின்றன. படுக்கும்போது நெருடாமல் இருக்க தன்

படுக்கையை ஏராளமான இலை தழைகளால் பஞ்சு மெத்தை போல் செய்து கொள்கின்றன.

இந்த மெத்தைப் படுக்கை தரையில் இருந்து குறைந்த பட்சம் 15 அடி உயரத்தில் அமைக்கப் படுகிறது.

மேலும் ஒரு செய்தி :

இந்த சொகுசு படுக்கை ஒரே ஓர் இரவுக்கு மட்டும் தான். ஒரு முறைப் பயன்படுத்திய படுக்கையை பின் பயன்படுத்துவது இல்லை.

- வாலில்லாக் குரங்குகளில் மேற்கு ஆப்ரிக்காவில் உள்ள வெப்ப மண்டலக்காடுகளில் வாழும் சிம்பன்சிகள் அறிவுக்கூர்மை உள்ளவை. மற்ற எந்த விலங்கைக் காட்டிலும் சிம்பன்சிகளுக்கும் மனிதர்களுக்கும் இடையேதான் ஒற்றுமை அதிகம் இருக்கிறது.

- ஐந்து அடி உயரம் கொண்ட சிம்பன்சியின் எடை சுமார் 50 கி.கி. உடல் முழுவதும் நீளமாக கருத்த முடி தொங்கும்.

கால்களைவிட, கைகள் நீண்டு இருக்கும். பாதங்களோ சிறிய முறம் போல அகன்று இருக்கும்.

வனங்களில் வாழும் இவற்றின் ஆயுள் காலம் 30 முதல் 38 ஆண்டுகள். ஆனால் மிருகக்காட்சி சாலை

கள், ஆய்வுக்கூடங்களில் வாழ்பவைகளின் அதிக நாள் ஆயுள் 60 ஆண்டுகள்.

- காடுகளில் வாழும் இவைகள் ஆகஸ்ட் முதல் நவம்பர் வரையிலான காலங்களில்தான் அதிக அளவில் உடலுறவு கொள்கின்றன.

ஆனால் மிருக காட்சி சாலைகளில் வாழ்கின்றவைகள் எப்போது வேண்டுமானாலும உடலுறவில் ஈடுபடுகின்றன.

- பெண் சிம்பன்சிக்கு பத்து வயதாகும் போது தான் கரு தரிக்கும். பேறு காலம் சுமார் 230 நாட்கள். இவை ஒரு குட்டி தான் போடும். அதுவும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் பேறு காலம் நடக்கிறது.

- குட்டிகள் எப்போதும் தாயைப் பற்றிக் கொண்டே இருக்கும். ஐந்து மாதம் வரையில் அது தாயின் வயிற்றையே தன் உலகமாகக் கருதி இருக்கும். தாயும் அதை பாதுகாப்பாக தன் கரங்களால் அணைத்திருக்கும்.

- ஐந்து மாதத்திற்குப் பின் குட்டி தாயின் முதுகில் குதிரை ஏறிக் கொள்ளும்.

- மூன்று வயது வரை தாய்ப்பால் குடிக்கும். ஆறு வயது வந்து விட்டால் குட்டி தாயைப் பிரிந்து தனித்து

இரை தேட முற்படும். அதுவரை தூங்குவது கூட தாய் அருகில்தான். புதிதாகக் குட்டிப் போட்டாலும் வளர்ந்த குட்டிகளை வளர்ப்பதில்- பாதுகாப்பதில் எந்தக் குறைகளும் வைப்பதில்லை.

● சிம்பன்சிகள் இரு கைகளையும், கால்களையும் ஊன்றி நடப்பதே வழக்கம். கால்களால் மட்டும் நடப்பதோ, கால்களை ஊன்றி நிற்பதோ எப்போதாவது தான்.

மகிழ்ச்சி வந்து விட்டதால் மட்டுமே இரு கால்களால் சிறிது நேரம் நிற்கும். ஆண் சிம்பன்சிகள் தன்னுடைய வீரத்தைக் காட்ட சில நேரங்களில நடந்து காட்டும்.

● சிம்பன்சிகளுக்கு மனிதர்களைப் போல வழுக்கை விழுவதும் உண்டு.

● ஆண் சிம்பன்சிகளின் நெற்றியில் முக்கோணம் போல சொட்டை விழும். இதில் எந்த மாற்றமும் இருப்பது இல்லை.

● பழங்களை விரும்பி தின்பதிலேயே ஒரு நாளில் நான்கு மணி நேரத்தையும், நீர் சத்துள்ள இலை, தழைகளை மென்று அசைபோடுவதில் இரண்டு மணி நேரத்தையும் செலவிடுகிறது.

● பழங்கள், இலைகளோடு விதைகள், பட்டைகளும் அது உணவாக உட்கொள்கிறது.

● சிம்பன்சிகள் சைவம் என்றுதான் கருதப்பட்டு வந்தன. ஆனால், அது உண்மையல்ல என்பது தற்போது ஆய்வில் தெரிய வந்துள்ளது.

● கறையான் என்றால் இதற்கு மிகவும் பிடிக்குமாம். இதோடு, எறும்பு, மீன், முட்டை போன்றவற்றையும் ஒரு கை பார்க்குமாம்.

● தனக்கு விருப்பமான கறையான்களைப் பிடிக்க சிம்பன்சி செய்யும் தந்திரம் புதுமையானதாகும்.

சிறிய மரக்கிளையை ஒடித்து அதில் உள்ள இலைகளை நீக்கிவிட்டு கறையான் புற்றுக்குள் நுழைக்கிறது.

குச்சியால் தாக்குண்ட கறையான்கள் கோபத்துடன் அதைக் கடிக்க இதுதான் சமயமென்று குச்சியை வெளியே எடுத்து அதை அப்படியே வாயில் வைத்து உறிஞ்சும். அவ்வளவுதான் குச்சியில் கடித்துக் கொண்டிருந்த கறையான்கள் சிம்பன்சியின் உணவாகிப் போகும்.

இரைக்காக வேட்டையும் ஆடும் சிம்பன்சிகள் என்ற உண்மை தற்போது தெரிய வந்துள்ளது.

இவை கூட்டம் கூட்டமாகச் சென்று குரங்குகள், சிறிய ஆடுகள், பன்றிகள் போன்ற விலங்குகளை வேட்டையாடி தின்கின்றன.

- சிம்பன்சிகள் கொடி விலங்குகள் தாக்க வரும்போது, தங்களை பாதுகாத்துக் கொள்ள மரங்களில் ஏறிக்கொள்ளும்.

- சிறுத்தை போன்ற விலங்குகள் என்றால் மரத்துக்கு மரம் ஏறி தாவி ஓடி தப்பித்துக் கொள்ளும்.

சில சமயங்களில் எக்குத்தப்பாக மாட்டிக் கொண்டால் கூட்டமாகச் சேர்ந்து கொண்டு மரக்கிளைகளை ஒடித்து அதனால் சிறுத்தையைத் தாக்கி பயமுறுத்தித் தப்பித்துக் கொள்ளும்.

- சிம்பன்சிதான் விலங்குகளிலேயே அதிக கருவிகளை கையாலும் ஆற்றல் பெற்றதாக இருக்கிறது.

ஆமாம், அவைகள் 17 வகையான கருவிகளை கையாலும் ஆற்றல் பெற்றதாக இருக்கிறது.

உதாரணமாக குச்சிகளை துடைப்பம் போன்று செய்து தன்னை தொந்தரவு செய்ய வரும் ஈக்களை விரட்டும்.

- கடினமான கொட்டைகளை உடைக்க கற்களை கத்திப் போல் பயன்படுத்துகின்றன.

- எதிரிகளிடமிருந்து தப்பிக்க குச்சிகளை உடைத்து வீசுகின்றன.

- வேட்டையாடும் போது கற்களை ஆயுதங்களாகப் பயன் படுத்துகின்றன.

- வாய் கிழிவது போல் உதட்டை இழுத்து எல்லாப் பற்களும் பளிச்சென்று வெளியே தெரிய சிரிக்க சிம்பன்சியால் முடியும்.

- மனிதனைப் போல் முகம் சிவக்க உணர்ச்சிகளை வெளியே காட்ட இவைகளால் முடியும்.

பயிற்சி கொடுப்பதன் மூலம் சிம்பன்சிகளிடம் சில பழக்கங்களை ஏற்படுத்த முடியும்.

சைகை மொழியைக் கற்பித்து, ஜாடையில் அவற்றோடு பேச முடியும். ஓவியம் வரையவும் அவற்றை பழக்க முடியும். இயந்திரங்களை இயக்கவும் வைக்க முடியும்.

- பெரிய அளவில் சிம்பன்சிகளுக்கு மூளையிருக்கிறது. இது விஞ்ஞானிகளுக்கு வியப்பளிக்கிறது.

- மனிதனைப் போன்ற பண்புகள் சிம்பன்சியிடம் இருப்பதால், உயிரியல் ஆய்வாளர்கள் தங்களின் பரிசோதனைகளுக்குச் சிம்பன்சிகளையே பயன் படுத்துகிறார்கள்.

- ஆய்வில் ஈடுபடும் உளவியல் வல்லுநர்கள் கூட இவற்றை விட்டு வைப்பதில்லை

- ஆப்பிரிக்காவின் வெப்ப மண்டலக் காடுகள், மனிதப் பெருக்கத்தால் அழிக்கப்பட்டு வருவதால், சிம்பன்சிகளின் இனமும் அழிந்து கொண்டு வருகின்றன.

- இந்த நிலை மேலும் தொடருமேயானால், மனித இனத்தின் நெருங்கிய உறவான சிம்பன்சியை நாம் படத்தில்தான் காண வேண்டியிருக்கும்.

- மனிதர்களைப் போலவே குரங்களிடமும் சில குணங்கள் இருக்கின்றன.

இவைகள் ஆண் 'குழந்தை'களையே பெற்றுக் கொள்ள விரும்புகின்றன. காரணம், ஆண் குரங்கு தான் தங்கள் கூட்டத்திற்கு தலைமையேற்கும் பழக்கம் உள்ளது.

இதை தாய் குரங்குகள் மதிப்பாக கருதுகிறதாம். ஒரு பெண் குரங்கு தொடர்ந்து எட்டு ஆண் குட்டி யையே பெற்றெடுக்கும்.

இதில் ஏதாவது சிறப்புகள் இருக்கும் என்று ஆய்வு செய்த போது இந்த பெண் குரங்கு ஒவ்வொரு முறை ஆண் குரங்குடன் இணை சேருவதற்கு முன்பாக ஒரு வித செடியின் இலையை தின்கிறது. இந்த இலையை

பரிசோதித்த போது இதில் உள்ள வேதிப்பொருள் கர்ப்பப்பையில் சில ரசாயன மாற்றங்களை உண்டாக்கி ஆண் குழந்தை உருவாகும் தன்மையை ஏற்படுத்து கிறது என கண்டு பிடித்துள்ளார்கள்.

மேலும், கருப்பையில் உள்ள முட்டையை ஆணாகவோ, பெண்ணாகவோ நிர்ணயித்து கருவுறச் செய்யும் தன்மையை சாப்பிடும் உணவு வகையால் மாற்றலாம் என விஞ்ஞானிகள் ஐயப்படுகிறார்கள். இது முழுமையாக கண்டு பிடிக்கப்படுமானால் ஆண் குழந்தை வேண்டு வோருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

- தவிர குரங்குகள் குடும்பக்கட்டுப்பாடு முறையைக் கூட கடைபிடிக்கின்றனவாம்.

எப்படி? உடலுறவுக்கு முன்னும் பின்னும் ஒரு குறிப்பிட்ட இலையை இவைகள் தின்கின்றன.

அப்போது இலையில் இருந்து உண்டாகும் ஒரு வித ரசாயனப் பொருள் கரு உண்டாகும் போது உருவாகும் ESTROGEN என்ற சுரப்பியை கட்டுப்படுத்தி கரு தரிப்பதை தடுக்கின்றதாம்.

- காட்டில் உள்ள விலங்குகள் தங்களுக்கு உண்டான விஷங்களை முறிக்கவும் தேவையான மூலிகைகளை அறிந்துள்ளன. மூலிகை மகத்துவத்தை

தன் குட்டிகளுக்கும் தாய் குரங்குகள் கற்றுத் தருகின்றன.

● தென் அமெரிக்காவில் ஹௌலர் என்ற இனத்தைச் சேர்ந்த உலகிலேயே மிக அதிகமாக சப்தம் எழுப்பும் குரங்குகள் வசிக்கின்றன. இளம் தாடியுள்ள இக்குரங்குகளின் தொண்டை பெரிய எலும்பால் அமைந்திருப்பது தான் இவை உண்டாக்கும் மிகப் பெரிய சப்தத்திற்குக் காரணமாம். இதே இனத்தைச் சேர்ந்த சிவப்பு ஹௌலர் குரங்குகள் எழுப்பும் ஒலி 4.8 கி.மீ தூரம் வரை கேட்குமாம்.

● உலகிலேயே மிகச் சிறிய குரங்கினம் கூட இருக்கின்றது. குறிப்பாக தென் அமெரிக்கா நாடு களில் காடுகளில் காணப்படும் 'பிக்மி' மர்மோசெட் எனும் இனத்திலிருக்கும் குரங்கு 12 செ.மீ. நீளமும் 70 கிராம் எடை மாத்திரமே கொண்டது.

குரங்குகள் தாவும் போதும் சரி, மற்ற சமயங் களிலும் சரி எதையாவது இறுகப்பிடித்துக் கொள்வதற் காக குரங்குகள் வாலை பயன்படுத்து வதுண்டு. சொல்லப்போனால் அதற்கு வால் கூட ஒரு கூடுதல் கையாக விளங்குகிறது.

தென் அமெரிக்காக் காடுகளில் தாடிக் குரங்குகள் இருக்கின்றன. இவைகளுக்கு 'அலறல் குரங்குகள்' என்று பெயர். இந்த பெயர் எப்படி வந்தது?

குரங்குகளிலேயே இந்த வகை குரங்கு தான் மிகுந்த சத்தத்துடன் கத்தக்கூடியதாம். இதிலும் 'சிவப்பு அலறல் குரங்கு' என்று ஒரு வகை இருக்கிறது. இந்த குரங்கு கத்தினால் ஐந்து கி.மீ தொலைவுக்குச் சத்தம் கேட்குமாம்.

● ஓரங்குட்டான் குரங்கிற்கும், மனிதனுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறதாம். இது உண்மை தான் போலிக்கிறது. இல்லாவிட்டால் 1984ல் ஜெர் மனியில் நடைபெற்ற உலக வனவிலங்கு நாளன்று ஒரு பாட்டில் பீயரை அனாசியமாக குடித்ததாம்.

● நம் வீட்டிற்குள் குரங்குகள் நுழைந்து விட்டால் அதை எப்படி விரட்ட வேண்டும்? குரங்கை நாம் நேருக்கு நேர் பார்க்கக் கூடாது. அப்படி பார்த்தால் அவை நம்மை எதிரியாக நினைக்கும், எதிர்க்கும். (இது உண்மையா என்பதை உங்கள் வீட்டிற்குள் குரங்கு வரும்போது சோதனை செய்து பாருங்கள். வேதனையில் முடிந்தால்...)

## *கொரில்லா :*

● மனிதர்கள் வெட்கப்படுவதைப் போல குரங்கும் வெட்கப்படும்.

● தென் அமெரிக்கா காடுகளில் 'உகாரி' என்று

ஒரு குரங்கு இனம் உண்டு. இதற்கு வழுக்கைத் தலையாக இருக்கும். பிறக்கும் போதே வழுக்கை கூடவே இருக்குமாம்.

ஆனால் முகம் மட்டும் வெளீர் சிவப்பாக இருக்கும். கோபப்பட்டால் முகம் சிவந்து விடும். அதே போல் வெட்கப்பட்டாலும் இதன் முகம் சிவந்து போய் விடும்.

- குரங்கு இனங்களில் ஒரு போர் வீரரைப் போல் ஆற்றல் கொண்டது கொரில்லா இனக்குரங்குகள்.

இந்தக் கொரில்லாக்கள் 1847க்குப் பின் தான், மேற்கு ஆப்பிரிக்காவின் வெப்ப மண்டலக் காடுகளில் இருப்பதையே கண்டுபிடிக்கப் பட்டது. அதன் பிறகே உலகம் முழுவதும் இச்செய்தி பரவத் தொடங்கியது.

இதை முதன் முதலில் கண்டவர்கள் இதன் அகன்ற மார்பையும், நீண்ட கைகளையும் ஆறடி உயரத்தில் இருந்ததையும் பார்த்து வியந்து பயந்து போனார்கள்.

இவைகளை வேட்டையாட சென்ற வேட்டைக் காரர்களின் கொடுமையால் தமது குடும்பத்தினர் படுகாயம் அடைந்து துன்பப்பட்டதைக் கண்ட ஆண் கொரில்லாக்கள் கோபம் கொண்டு வேட்டைக் காரர்களின் கைகளில் இருந்த துப்பாக்கிகளைப் பிடுங்கி நசுக்கிப் போட்டன. அவர்களின் கை கால்களை ஒடித்துப் போட்டன...

இப்படி அவைகளிடம் இருந்து தப்பி வந்த மனிதர்கள் கொரில்லாக்களைப் பற்றி பொய்க் கதைகளை தங்கள் எண்ணம் போல் திரித்து விட்டார்கள்.

இதனால் கொரில்லாக்கள் என்றாலே கொடூரமான ஒரு விலங்கு என்று மக்கள் இடையே செய்தி பரவி இருந்தது.

ஆனால், இது உண்மையில்லை என்ற உண்மை பல ஆண்டுகளுக்குப் பின் மனிதர்களுக்குத் தெரிய வந்தது.

இந்த உண்மையை ஆயுதங்கள் ஏதுமின்றி அவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய கொரில்லாக்கள் வாழும் பகுதிக்குச் சென்ற விலங்கியல் ஆய்வாளர்கள், கொரில்லாக்கள் தீங்கு ஏதும் செய்யாதவை என்று தெரிவித்தார்கள்.

கொரில்லாக்குரங்குகள் இயல்பில் மிகவும் கூச்ச மானவை என்று அவர்கள் தெரிவித்தபோது உலகே வியப்பில் ஆழ்ந்தது.

மனிதர்களை கொரில்லாக்கள் கண்டால் அடித்து துவசம் செய்து விடும் என்று அதுவரை உலகில் நிலவி வந்த பொய்ப் பிரச்சாரம் அழிந்து போய் விட்டது.

உண்மை என்னவென்றால் கொரில்லாக் குடும்

பத்தை எதிரிகள் தாக்கினால் தான் ஆண் கொரில்லாக் களுக்குக் கோபம் வரும். அப்போது பாதுகாப்புக்காக திருப்பித் தாக்குகின்றது. நாம் தீங்கு செய்வில்லை என்றால் அது தன் போக்கில் யாரையும் கண்டு கொள்வதே இல்லை. இதுவே உண்மை.

உளுந்திற்கு விளக்கெண்ணையைப் பூசினால் எப்படி இருக்கும்? அப்படி அதன் முகம் பளப்பளப்பாக கருப்பாக இருக்கும். முகம், மார்பு, உள்ளங்கை உள்ளங்கால் தவிர உடம்பெல்லாம் பஞ்சுபோன்ற அடர்த்தியான முடியிருக்கும்.

வயது முதிர்ந்த ஆண் கொரில்லாக்களின் தலை முகட்டில் சேவல் கொண்டை போல் கொத்தாய் முடியிருக்கும். பின் முதுகில் வெள்ளி நிறத்தில் முடி நரைத்து விடும்.

ஆண் கொரில்லாவின் எடை சுமார் 200 கி.கி. இருக்கும். பெண் கொரில்லாவிற்கு எடை ஆணை விட குறைவாக இருக்கும்.

மிருக காட்சிசாலைகளில் வாழும் கொரில்லாக் களின் வாழ்நாள் 50 ஆண்டுகளாகும். ஆனால், காடு களில் வாழும் கொரில்லாக்களின் வாழ்நாள் இதைவிட குறைவாகவே இருக்கும். காரணம் அவற்றைத் தாக்கும் பல்வேறு நோய்களே.

கொரில்லாக்கள் எப்போதும் குடும்பம் குடும்ப மாகவே வாழும் தன்மை கொண்டவை.

குடும்பம் என்பது, ஒரு பெரிய ஆண் கொரில்லா, சில பெண் கொரில்லாக்கள், ஐந்தாறு குட்டிகள் இதுதான் குடும்பம். இதில் ஆண் கொரில்லா தான் குடும்பத்தலைவர்.

குடும்பத்தலைவரான ஆண் கொரில்லாவே நாளை காலை எழுந்ததும் எங்கே செல்வது, எங்கு தங்குவது என்ற முடிவுகளை எடுப்பார். இடையில் ஏதாவது விபத்து என்றால் பாதுகாப்பதும் தலை வரையே சார்ந்தது.

மனிதர்களைப் போல ஆண் கொரில்லாக்களுக்கு 'சின்ன' வீடுகளும் உண்டு. இதில் மூன்று அல்லது நான்கு பெண் கொரில்லாக்கள் இருக்கும். இருந்த போதிலும் ஒன்றை ஒன்று கண்டு கொள்வதே இல்லை. அதனால் அங்கே 'சக்களத்தி'ச் சண்டைக்கே இடமில்லை.

பெண் கொரில்லாக்கள் ஒவ்வொன்றும் தன் பிள்ளைகளிடமும், தலைவனிடமும் மட்டுமே சுமுகமாக இருக்கும்.

ஆண் கொரில்லாவுக்கு வாலிபப் பருவம் 12

வயதில் வருகிறது. 8 வயதுக்குப் பிறகே பெண் உடலுறவில் ஈடுபடுகிறது. பேறுகாலமோ 8 முதல் 9 மாதம் ஆகும். ஒரு குட்டி தான் போடுகிறது.

மூன்று மாதம் வரை குட்டியைத் தன் மார்பில் அணைத்து பாதுகாக்கிறது. அதன்பின் தாயைக் கெட்டியாக பிடித்துக் கொள்ளும் அளவிற்குக் குட்டிக்கு பலம் வந்து விடுகிறது. பின் அதன் முதுகில் ஏறி சவாரி செய்கிறது.

மூன்று வயது வரை பால் குடிக்கும். இந்தக் காலங்களில் தாய் கொரில்லா இணை சேர்வதில்லை. இதனால், நான்கு ஆண்டுகளக்கு ஒரு முறை தான் கர்ப்பம் தரிக்கிறது.

குட்டிகள் பெரிதானதும் குடும்பத்திலிருந்து பெண்ணும், ஆணும் பிரிந்து போய் விடுகின்றன.

விலங்குக் குடும்பங்களில் இச்செயல் விநோதமான ஒன்றாகும். மற்ற விலங்குக் குடும்பங்களில் வயது வந்த குட்டிகளை அக்குடும்பத்தலைவன் விரட்டி அடிப்பது தான் வழக்கம். அப்படியேதும் கொரில்லாக் குடும்பங்களில் நடப்பது இல்லை.

பிரிந்து செல்லும் ஆண் கொரில்லா குட்டிகளோ, பெண் கொரில்லாக்களோ வேறொன்றுடன் குடும்பம் நடத்தத் தொடங்கும்.

ஒரே பகுதியில் பல்வேறு கொரில்லாக் குடும்பங்கள் இருந்தாலும் ஒன்றை ஒன்று தொடர்பு கொள்வது இல்லை.

மிருகக் காட்சி சாலைகளில் இருக்கும் கொரில்லாக்கள் தான் அசைவமாக இருக்கின்றன. காட்டில் உள்ள கொரில்லாக்களோ சுத்த சைவமாக வாழ்கின்றன.

இலைகள், பழங்கள், தளிர்கள், தண்டுகள் என்று கொரில்லாக்கள் தன் உணவைத் தேடிக் கொள்கின்றன.

உணவுக்காக இவை பாதி நேரத்தை செலவிடுகின்றன. இதற்காக பல மைல்கள் கடந்து செல்வது இல்லை. தங்கள் இருப்பிடத்தைச் சுற்றியே தேடிக் கொள்கின்றன.

காலையில் எழுந்ததுமே உணவைத் தேடத் தொடங்கி விட்டு, மதியம் ஆனதும் 'ஹாயாக' ஓய்வு எடுக்கின்றன.

அந்த நேரத்தில் குட்டிகள் அவைகளைச் சுற்றி விளையாடும். பொய்யாகச் சண்டை போடும். மரக்கிளைகளைப் பற்றி ஊஞ்சலாடும்.

ஓய்வு முடிந்து பின் உணவு தேடல். அதன் பிறகு உறக்கம்.

சிம்பன்சிக்ளைப் போலவே கொரில்லாக்களும் இலை தழைகளால் தான் தங்கள் இருப்பிடத்தை அமைத்துக் கொள்கின்றன.

ஆனால், ஒரு வேறுபாடு உண்டு. சிம்பன்சிகள் உருவில் சிறியவை என்பதால் மரத்தில் தன் இருப் பிடத்தை அமைத்துக் கொள்கின்றன. கொரில்லாக் களால் அப்படி அமைத்துக் கொள்ள முடியாது. காரணம் இதன் உடல் அமைப்பும், 200 கிலோ எடையும் தான். அதனால் தன் இலைமெத்தையை தரையிலேயே அமைத்துக் கொள்கின்றன.

இப்படி அமைக்கும் படுக்கையில் ஒரே நாள் தான் படுக்கும். ஆமாம், அடுத்த நாள் வேறு ஒரு இடத்தில் தன் இருப்பிடத்தை அமைத்துக் கொள்ளும். அதுவே அதன் பழக்கம்.

கொரில்லாக்கள் எப்போதும் இரண்டு கால்களால் நடக்காது. அதற்கு மகிழ்ச்சி வரும் போதும், தன் எதிரிகள் தங்கள் எல்லைக்குள் நுழைந்து விடும் போதும் மட்டுமே இரண்டு கால்களில் நிற்கும். அவ்வேளையில் தன் அகன்ற மார்பில் இரு கை களாலும் அடித்துக் கொள்ளும். அந்த ஒலி பெரிய அளவில் கேட்கும்.

ஆண் கொரில்லாவின் கர்ஜனை மிகவும் பயங்கரமாக

இருக்கும். இதே நேரம் கொரில்லாவால் பலவிதமான ஒலிகளை எழுப்ப முடியும்.

எப்போதாவது கொரில்லாக்களிடம் சண்டை வருவதும் உண்டு. அந்தச் சண்டையும் பதவிக்காகத் தான். (மனிதர்களிடம் கற்றுக் கொண்டனவோ?)

ஒரு குடும்பத் தலைவனை நீக்கி விட்டு அந்தக் குடும்பத் தலைமைக்கு இன்னொரு ஆண் கொரில்லா முனையும். அப்போது தான் இந்தச் சண்டை மூளும். அப்போது காடே அதிரும்படி கர்ஜனைகள் செய்து மார்பில் அடித்துக் கொள்ளும்.

இந்த கர்ஜனை மூலம் யார் வலிமை கொண்டவர் என்பது அங்கே தீர்மானம் ஆகும். அப்போது தோற்று விட்டதாக கருதும் கொரில்லா அந்த இடத்தை விட்டு அகன்று விடும்.

இப்படி 'அமைதிச் சண்டை'யை வேறு எந்த இனத்திலும் பார்க்க இயலாது.

கொரில்லாக்களில் இரண்டு வகை இருக்கின்றன. ஒரு வகை நிலத்தில் வாழ்பவை. மறு வகை மலைகளில் வாழ்பவை.

இந்த இரண்டாவது வகை ருவாண்டா, சயர் உகாண்டா போன்ற நாடுகளில் 4000 மீட்டர் உயரத்தி

லுள்ள மலைகளில் வாழ்கின்றன. இவற்றின் எண்ணிக்கை தற்போது 500க்கும் குறைவாகவே இருக்கின்றன.

கொரில்லாக்களுக்கு காட்டிலே வாழும் சிங்கம், புலி, யானைகள் எதிரிகள் இல்லை. நாட்டில் வாழும் மனிதர்களே எதிரிகள்.

பெரும்பாலும் மனிதர்கள் இதனை உணவுக்காகவே வேட்டையாடி இந்த அபூர்வ இனத்தை அழிப்பதோடு அந்த வேட்டையின் போது காடுகளையும் அழித்து வருகிறார்கள் என்பது வேதனைக்குரிய ஒன்றாகும்.

இன்னும் சில ஆண்டுகளில் மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மக்கள் பெருக்கம் இரு மடங்காகக் கூடும் என்று கருதப்படுகிறது.

அப்போது, அங்குள்ள பல ஆயிரம் கொரில்லா களின் நிலை அழிவில் தான் நிற்கும்.

இந்த நிலையை யார் தடுப்பது?... அறிவு ஜீவிகள் தான் சிந்திக்க வேண்டும்!





# கங்காரு

- அதிசயமான விலங்கு கங்காரு.

இது எல்லா நாட்டிலும் வாழவில்லை. ஆஸ்திரேலியா நாட்டில் மட்டுமே வாழ்கின்றன.

கங்காருவிற்கு நான்கு கால்கள் இருந்த போதும் இரண்டு கால்களில் மட்டுமே நிற்கின்றன. அதுவும் பின்னங்காலை மட்டுமே பயன்படுத்துகின்றன.

மேலும், கங்காருவிடம் ஒரு விநோத செயல் உண்டு. கால்களை தரையில் ஊன்றாமல் வாலை மட்டுமே ஊன்றி நிற்கக் கூடிய ஒரே விலங்கு கங்காரு மட்டும் தான்.

கங்காரு முழுமையான சைவம். புல்லை மட்டுமே தின்னும். புல் கிடைக்காத போது சில வேளைகளில் இலை, தழைகளையும் தின்னும்.

இதன் முன்கால்கள், பின் கால்களை விட சிறிதாக இருக்கும்.

இதற்கு ஆபத்து வரும் நேரங்களில் ஓடும் போது வாலோ முன் உள்ள சிறிய கால்களோ பூமியைத் தொடாது. பின் இரண்டு கால்களை மட்டுமே மண்ணில் பதித்து உயரமாய் எம்பி எம்பிக் குதித்து ஓடும்.

கங்காருவின் உடல் நிலை வெப்பத்தைத் தாங்கிக் கொள்ளும் நிலையில் இல்லாததால், அவை இரவிலேயே தன் உணவைத் தேடுகின்றன.

பகலில் புல்வெளி எங்கிருக்கிறதோ, அங்கேயே நிழலைத் தேடி ஓய்வெடுக்க தன்னுடலுக்கு ஏற்றார் போல் குழி பறித்து அதில் படுத்துக் கொள்கின்றன.

கங்காருவின் உடம்பில் மிகவும் சூடேறும் நேரங்களில் மூச்சிரைக்கும். அப்படி செய்யும் போது ஓரளவு அதன் உடல் சூடு தணியும். சில நேரங்களில் நாக்கால் தன்னுடலை வருடி எச்சில் படுத்தி சூட்டை தணிப்பதும் உண்டு.

சராசரியாக கங்காருவின் எடை 60 கிலோ

இருக்கும். சில பெரிய கங்காருவின் எடை 90 கிலோ இருக்கும். இதன் நீளம் வாலில் இருந்து மூக்கு வரை பத்தடி இருக்கும். இதன் வேகம் மணிக்கு 30 மைல்.

இதன் தாவல் வியப்பிற்குரிய ஒன்றாகும். தரைக்கு மேல் பத்தடி உயரம் கிளம்பி ஒரே தாவலில் 27 அடி தூரம் தாவ முடியும்.

பத்தடி நீளமும், 60 கிலோ எடையும் கொண்ட கங்காரு போடும் குட்டியின் நீளமோ ஒரு அங்குலத் திற்கும் குறைவு. முக்கால் கிராம் தான்.

தாய் கங்காருவின் வயிற்றில் குட்டி ஒரு மாதம் மட்டுமே இருக்கிறது. பிரசவத்தின் முன் தாய் கங்காரு தனது மதலைப் பையை சுமார் 2 மணி நேரம் தன் நாவினால் தடவி தூய்மை செய்கிறது. பிறகு பேறு காலத்திற்கு தயாராகிறது. அந்த நேரத்தில் அது உட் கார்ந்தோ, மரத்தில் சாய்ந்து கொண்டோ பிரசவிக் கிறது.

பிறந்த சின்னக்குட்டி மெதுவாகத் தவழத் தொடங்குகிறது. அந்த நிலையில் அதற்கு கண்ணும் தெரியாது. காதும் கேட்காது. ஆனால், மூக்கின் உதவி யால் அதற்கு வாசனையை உணர முடிகிறது.

இப்படி மெல்லத் தவழ்ந்து சென்று தாயின் மீது ஏறி

மதலைப் பையை அடையும். இந்த நிலையில் தாயின் உதவியின்றியே குட்டி செயல்படுகிறது என்பது அதிசயமான ஒன்றே.

மதலைப் பையை அடைந்த குட்டி தன் உணவிற் காக காம்பைத் தேடும். தாயின் காம்பைக் குட்டி பற்றியதும், காம்பு திடீரென்று பருத்துக் கொண்டு, குட்டிக் கங்காருவின் வாயைக் கவ்விக் கொள்கிறது. குட்டி விரும்பினால் கூட அதன் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியாது.

இதனால் தான் தாய் கங்காரு எவ்வளவு வேகமாக ஓடினாலும் பையில் உள்ள குட்டி ஆடாமல் அசை யாமல் இருக்க முடிகிறது.

இப்படி கங்காரு குட்டி பல வாரங்கள் 'பை'யிலேயே வளர்கிறது.

இப்படி வாழ்ந்த குட்டி சிறிது காலத்திற்குப் பிறகு பைக்குள்ளிருந்து தலையை மட்டும் தூக்கி வெளி உலகைக் காண்கிறது.

ஆறுமாதம் கழித்த பின் தான் கங்காரு குட்டி வெளியே காலடி எடுத்து வைக்கிறது. அந்த நேரத்தில் கூட தனித்து எங்கும் போகாது. தாயின் பார்வை படவே துள்ளி விளையாடும். அப்போது திடீரென்று ஆபத்து வந்துவிட்டால் ஓடிச் சென்று தாயின் பைக் குள் பதுங்கிக் கொள்ளும்.

எட்டு மாத கங்காரு குட்டியின் அளவிற்கு மதலைப்பை சிறிதாகி விடுவதால், பையைத் துறந்து வெளியே வந்து விடுகிறது.

அப்போதுதான் மற்ற கங்காருகளைப் போல் புல் மேயத் தொடங்குகிறது. இருந்தாலும் வெளியே இருந்தபடி நான்கு மாதங்கள் பால் குடிக்கும்.

ஒரு வயது முடிந்த பிறகும் குட்டி பால் குடிக்க முனையும். ஆனால் தாய் அதன் கடமையை உணர்த்துவது போல் ‘உனக்கு வந்து விட்டது வயது, நீ இனி தனித்தே வாழ முடியும் ‘போய் வா’ என்ற கூறிவிடும். அதன்படியே அவைகளும் தனித்து பிழைக்கத் தோன்றிவிடும்.

பெரிய கங்காருகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று சிவப்பு நிறக் கங்காரு. மற்றொன்று சாம்பல் நிறக்கங்காரு. முன்னது வெட்ட வெளியிலும், பின்னது காடுகளிலும் வாழ்கின்றன.

ஆபத்தில் எதிரிகளைத் தாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் கங்காரு கொஞ்சம் கூடத் தயங்குவதில்லை. அப்போது எல்லாம் தன் வலிமையான வாலை மட்டும் தரையில் ஊன்றி நின்று கொண்டு பின்கால்களால் எதிரியைத் காட்டுமிராண்டித்தனமாக மின்னல் வேகத்தில் தாக்கும். எதிரே மனிதன் என்றால் இதன் முரட்டு அடியால் அவன் வயிறு கிழிந்தே போகும்.

இரண்டு கங்காருகளுக்குள் சண்டை என்றாலும் இதே முரட்டு அடி தான். முன்னங்கால்களால் எதிரியைப் பிடித்துக் கொண்டு, பின்னங்கால்களால் போடு போடு என்று போட்டுக் கொன்று விடும்.

கங்காருவின் இறைச்சிக்கும், தோலுக்கும் நாட்டில் வரவேற்பு இருப்பதால் பெரும்பாலும் இந்த இனம் அழிந்து வருகிறது.

இந்த அரிய இனம் அழியத் தொடங்கி விட்டால் ஆஸ்திரேலியா என்றால் நமக்கு கங்காருவின் நினைவே வராமல் போகும்!

மனிதர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, இந்த விநோத விலங்கை வாழ வைப்போமா?

● ஆஸ்திரேலியா மிருகமான கங்காருவுக்கு அந்தப் பெயர் வந்த காரணம் வேடிக்கையானது.

முதன் முதலில் ஆஸ்திரேலியாவில் அதை ஆய்வு செய்வதற்காக வந்திறங்கியவர்கள் அங்கு ஒரு விநோதமான மிருகத்தைக் கண்டார்கள். அங்கிருந்த ஆதிவாசியை அது என்ன மிருகம் என்று கேட்டிருக்கிறார்கள். அந்த ஆதிவாசி 'கங்காரு' என்றானாம். கங்காரு என்றால் அவர்கள் மொழியில் 'நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என்று எனக்கு விளங்கவில்லை' என்று பொருளாம். புதிதாய்

வந்தவர்கள் அந்த மிருகத்தின் பெயரே அது தான் என்று நினைத்து, அன்றிலிருந்து அதை 'கங்காரு' என்றே அழைக்கத் தொடங்கி விட்டார்களாம்.

- பெண் கங்காருவின் பிறப்பு உறுப்பில் இரு வழிகள் உள்ளன. ஆண் கங்காருவின் பிறப்பு உறுப்பு ஊசி முனையைப் போல இருக்கும். கங்காருக்கள் மற்றோர் புதிய குட்டியைப் போடுவதற்கு எப்போது வேண்டுமானாலும் தயார் நிலையில் இருக்கும்.

- கங்காருவின் பையில் குட்டி உயிருடன் இருக்கும் வரை அதன் முட்டைக்கரு செயலற்று இருக்கும். பையில் உள்ள குட்டி இறந்து விட்டால் அல்லது இழக்கப்பட்டுவிட்டால் முட்டை முதிர்ச்சி யடைய ஆரம்பித்து விடும். கங்காருவின் உடலில் இருவிதமான பால்கள் இருக்கும். ஒரு பால் கங்காரு வின் பைக்குள் இருக்கும். குட்டிக்காகவும் மற்றொரு பால் பையிலிருந்து வெளியேறும் குட்டிக்காகவும்.

- கங்காரு மாமிசத்தில் 'கொலஸ்ட்ரால்' கிடையவே கிடையாது. அதற்காக இப்போது அதற்கு ஏக கிராக்கி ஏற்பட்டு வருகிறது.

- கங்காருவின் பால் வெளியே சிவப்பு நிறமாய் இருக்கும். பாலில் சர்க்கரைச் சத்து கிடையாது.

• கங்காரு தன் எதிரிகளிடமிருந்து தப்ப எப்படித்தாவி ஓடும் என்பதை நாம் அறிவோம்.

அவற்றுள் தாய் கங்காரு தப்பி ஓடும் பொழுது எதிரியிடம் அகப்பட்டுக் கொள்வோம் என்று தெரிந்தால் தன் வயிற்றுப் பையிலுள்ள குட்டியை எடுத்துப் புதருக்குள் வீசி விட்டு ஓடி விடும்.

தான் அகப்பட்டு இரக்க நேரிட்டாலும் தன் பிள்ளையாவது பிழைத்துக் கொள்ளட்டுமே என்ற பாச உணர்வு தான் காரணம்.

ஆஸ்திரேலியாவில் குரங்கு போல் மரம் ஏறும் கங்காருகள் இருக்கின்றன. இவை தரையில் வசிப்பதை விட மரங்களில் வசிப்பதையே மிகவும் விரும்புகின்றன.

மேலும் - மற்ற கங்காருகளை விட நீண்ட வளர்ந்த நகங்களும் நீண்ட முன்னங்கால்களும் இவற்றிற்கு இருக்கின்றன.



# நீர் யானை



- நீர் யானை பகல் முழுதும், நீரிலும் இரவில் தரையிலும் வாழும் விலங்காகும்.

- ஆப்பிரிக்காவின் வெப்ப மண்டலப் பகுதியிலுள்ள நதிகளில் இவை வாழ்கின்றன. அவ்வப்போது புதிதாக வந்து சேரும் நீர் நிறைந்த ஏரிகளிலும் இவைகளைக் காணலாம்.

- தண்ணீரில் வாழ்வதற்கு ஏற்ப இதன் உடல் வாகு அமைந்திருக்கிறது. இதன் உடல் முழுவதும் நீரில் மறைந்து இருந்தாலும் இதன் தலை மட்டும்

நீருக்கு மேல் தெரியும்படி வைத்துக் கொள்ள இதனால் எளிதாக முடியும்.

● ஐந்து நிமிட நேரம் மட்டுமல்ல தேவை ஏற் பட்டால் இதனால் 15 நிமிடம் கூடத் தண்ணிரினுள் மூழ்கி இருக்கும் ஆற்றல் பெற்றது, நீர் யானை.

● நீர் யானைக்கு மகிழ்ச்சி வந்து விட்டால் தூண் போன்ற குட்டை கால்களால் நீரைக் கிழித்துக் கொண்டு அழகாகவும், வேகமாகவும் நீந்தும். அந்தக் காட்சி பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

● பெண் நீர் யானையை விட ஆண் நீர் யானையின் எடை சற்று கூடுதலாக இருக்கும். சராசரி ஓர் ஆண் நீர் யானையின் எடை மூன்றுடன் இருக்கும்.

● ஓர் ஆண் யானை, சில பெண் யானை அவை களின் குட்டிகள் சேர்ந்தது ஒரு கூட்டம். இப்படி கூட்டம் கூட்டமாகத்தான் குடும்பமாக வாழும்.

● நீர் யானை இரவில் தான் இரை தேட நிலத்தை நோக்கி வரும். அதுவும் சூரியன் மறைந்த பிறகே. கரைக்கு வரும் நீர் யானை புல் மேய்ந்து விட்டு சூரியன் வருவதற்கு முன்பே தண்ணீருக்குத் திரும்பி விடும். இவை தண்ணீரை விட்டு கரைக்கு இரை தேட வரும் போது அது நடந்த பாதை சிமிண்டு ரோடு

போட்டது போல் சமமாக இருக்கும். இவை நடந்து செல்லும் பாதை எங்கும் சாணம் குவியல் குவியலாய் கிடக்கும்.

- நீர் யானையின் சாணத்திற்கு தனி வாசனை உண்டு. இந்த வாசனை மூலம் 'இது எங்கள் எல்லை. பிறர் வரக்கூடாது' என்று எதிரிகளுக்கு எச்சரிக்கை செய்யப்படும்.

- சில சமயங்களில் அதன் பெரிய உடலைத் தூக்கிக் கொண்டு உணவுக்காக 15 மைல் தூரம் கூட நீர் யானைகள் நடக்கும்.

- நீர் யானையின் தடித்த உதடு ஒன்றே முக்கால் அடி நீளம் இருக்கும். இந்த உதட்டினால் புல்லைப் பிடிங்கி தின்பதோடு, மரங்களுக்குக் கீழே கிடக்கும் பழங்களையும் தின்னும். கரையில் மேய்ந்த பிறகு வந்த வழியே மீண்டும் தண்ணீருக்குள் புகுந்து கொள்ளும்.

- நீர் யானை பகல் முழுதும் சோம்பேறியாகத் தான் தன் வாழ்க்கையை கழிக்கிறது. சோம்பேறி வாழ்க்கை நீர் யானை வாழ்ந்தாலும் சில நேரங்களில் அதற்கு கோபமும் வருவதுண்டு.

- ஒவ்வொரு ஆண் நீர் யானையும் தனது பெண் யானைகளுடனும், குட்டிகளுடனும் நதியின் குறிப் பிட்ட பகுதியில் வாழும்.

- தரையில் எங்கு புல் மேய போனாலும், திரும்பி அதே பகுதிக்கு வந்து விடும். தவறியும் நதியின் வேறு பகுதிகளுக்குச் செல்லாது.

அந்த இடத்தை வேறு எந்த ஆண் நீர் யானை வந்து சொந்தம் கொண்டாட வந்தாலும் அதனுடன் சண்டை போடும்.

இந்தச் சண்டையின் தொடக்கம் வேடிக்கையாக இருக்கும்.

புதிதாக சொந்தம் கொண்டாட வரும் ஆண் நீர் யானை தனது எல்லைக்குள் வருவதைப் பார்த்தவுடன் முன்பே, அந்தப் பகுதியில் வாழ்ந்து வரும் நீர் யானை தனது பின்புறத்தைக் காட்டி நின்று கொள்கிறது. வந்த நீர் யானையும் அப்படியே நிற்கும்.

பிறகு அதனதன் பகையைக் காட்டிக் கொள்ள, இரண்டுமே நின்ற இடத்திலேயே சாணத்தைப் போட்டுத் தள்ளுகின்றன.

விழும் சாணம் ஒரே இடத்தில் விழுவது இல்லை. விழ விழ குட்டையான துடுப்பு போன்ற வாலினால் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாகத் தட்டிவிடு கின்றன. வாலின் வலிமைக்குத் தகுந்தாற்போல் சாணம் தூரத்தில் தெறித்து விழும்.

அந்த சாணத்தில், அதைப் போடும் நீர் யானைக்கே உரிய தனிப்பட்ட வாசனை இருக்கிறது. இதன் மூலம் அது எவ்வளவு தூரம் கோபம் அடைந்திருக்கிறது என்பது வெளிப்படுகிறதாம்.

இந்த வழி முறையில் சொந்தம் கொண்டாட வந்த நீர் யானை திரும்பிப் போகவில்லை என்றால் சண்டை எழ ஏதுவாகும்.

இரண்டு நீர் யானைகளும் ஒன்றோடு ஒன்று சண்டையிடுவது போல் முன்னுக்கு வரும். ஆனால், சண்டையிட்டுக் கொள்ளாது.

பிறகு இரண்டும் தண்ணீரில் மூழ்கி, மூழ்கி எழுந்து நிற்கும். அதிக ஒலி எழுப்பி உறுமிக் கொள்ளும். ஒன்றின் மீது ஒன்றாக நீரை வாரியடித்துக் கொள்ளும். மூக்கினாலும், வாயினாலும் நீரை வான் நோக்கி 'பீச்' சடிக்கும்.

இந்த கட்டத்தில், வந்த நீர் யானை பின் வாங்கவில்லை என்றால், அங்கே ரத்தப் போர் தான்.

கோணியைப் போன்ற வாயை அகலமாகத் திறந்து கொண்டு பற்களால் எதிரியின் முகத்தையும், உடலை யும் கடிக்கும். ரத்தம் வழியும்.

- எதிர்பாராது ஏற்படும் காயங்கள் ஆறிவிடும்

இயல்பு நீர் யானையின் தோலுக்கு உண்டு. சண்டை முடிந்த சிறிது நாள்களிலேயே காயங்கள் ஆறிவிடும்.

அரை மணி, ஒரு மணி நேரம் நடக்கும் இச்சண்டையில் பெரும்பாலும் இடத்தைச் சொந்தம் கொண்டாட வரும் நீர் யானைதான் தோல்வியைத் தழுவும். பின் தலையையும், உடலையும் தாழ்த்திக் கொண்டு தோல்வியை ஏற்றுக் கொள்ளும்.

● சில நேரங்களில் நீர் யானையால் மனிதர்களுக்கு ஆபத்து ஏற்படுவதும் உண்டு. எளிதில் கோபம் கொள்ளும் இயல்புடையது ஆண் நீர் யானை. தனது எல்லைக்குள் யாரேனும் கட்டு மரங்களிலோ படகிலோ வந்தால் அவ்வளவு தான். அதன் மீது மோதி, தண்ணீருக்குள் மூழ்கடித்து விடும்.

ஆப்பிரிக்காவில் வாழ்கின்ற பழங்குடியினர், நீர் யானையின் இறைச்சியின் மீது மிகுந்த விருப்பம் கொண்டவர்களாக இருப்பதால், அதனை பல ஆண்டுகளாக வேட்டையாடி வருகிறார்கள்.

சிலநேரங்களில் வேட்டைக்கு வருகின்றவர்களின் உயிருக்கே ஆபத்து வந்து விடும்.

● நீர் யானையின் பெரிய வாய்க்கு பயங்கரமான சக்தி உண்டு.

ஒரு முறை நீர் யானையை வேட்டையாட வந்த

ஒருவரை ஒரே கடியில் கடித்து இரண்டு துண்டு களாகப் போட்டு விட்டதாம்.

● பெண் யானை குட்டிப் போடும் காலங்களில் மட்டும் தன் இனத்தை விட்டு தனியாகப் பிரிந்து போய் விடுகிறது.

அந்த நேரத்தில் மட்டும் தன் விருப்பத்திற்கு தகுந்த ஒரு நல்ல இடத்தைத் தேர்வு செய்து தனித்து வாழ்கிறது.

● நீர் யானை தண்ணீர்க்குள் தான் குட்டிப் போடுகிறது. ஒரு பிரசவத்தில் ஒரே குட்டி தான் போடுகிறது.

பிறந்த குட்டி உடனே நீர் மட்டத்திற்கு மேலே வந்து புதிய உலகப் பார்த்து முதன் முதலாக வெளிக் காற்றைச் சுவாசிக்கிறது.

பிறகு, தாயின் பால் மடியைத் தேடிச் சென்று இரு காம்புகளில் ஒன்றைப் பற்றி பால் அருந்துகிறது.

தொடக்க காலத்தில் தண்ணீருக்குள் இருந்த படியே பால் குடிக்கிறது. அதனால், இளமை காலத்தில் எதிரிகளிடமிருந்து வரும் ஆபத்தில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்கிறது.

● பிரசவத்திற்கு தாய் வீடு சென்ற பெண் மீண்டும் கணவன் வீட்டிற்கு வருவதைப் போல நீர் யானை

பிரசவத்திற்காக தனி இடம் நோக்கி சென்றதில் இருந்து சில வாரங்களில் குட்டியுடன் தன் கூட்டத்தை நோக்கி வந்து மீண்டும் சேர்ந்து கொள்கிறது.

புதிதாக வந்த குட்டி ஏற்கனவே கூட்டத்திலுள்ள குட்டிகளுடன் சேர்ந்து மகிழ்ச்சியோடு விளையாடத் தொடங்குகிறது.

தண்ணீரில் இருக்கும் போது குட்டிகள் தாயின் பரந்த முகுதுப் பகுதியில் ஏறி விளையாடவும் படுத்துக் கொண்டும் சுற்றுப் புறத்தைப் பார்ப்பதுண்டு.

● சிங்கம், சிறுத்தை, கழுதைப் புலிகளே நீர் யானைக் குட்டிகளுக்கு பயங்கர எதிரிகள். எப்போதாவது நீரில் முதலைகளும் குட்டிகளைத் தாக்குவதுண்டு.

ஒரு வயது ஆவதற்குள்ளயே பல நீர் யானைக் குட்டிகள் எதிரிகளால் கொல்லப் படுகின்றன.

இப்படி எதிரிகளிடமிருந்து தப்பித்து வளர்ந்தால், ஒரு நீர் யானை ஐம்பது ஆண்டுகள் வாழும்!

● மனிதனை விட வேகமாக ஓடக்கூடியது நீர் யானை.

● ஆங்கிலத்தில் நீர் யானைக்கு ‘ஹிப்போ போட்டமஸ்’ என்று பெயர். இதைச் சுருக்கி ‘ஹிப்போ’

என்று அனைவரும் அழைக்கிறார்கள். 'ஹிப்போ போட்டமஸ்' என்பது கிரேக்க வார்த்தை. இதற்கு 'நதிக்குதிரை' என்று பொருள்.

● சுமார் மூன்று டன் எடை கொண்ட பெரிய உருவம் நீர் யானை. இது தின்னும் உணவோ மிக மிகக் குறைவாகவே உள்ளது.

இதன் வாழ்க்கை சோம்பேறித்தனமானது என்று கூடச் சொல்லலாம்.

காரணம், இது பகல் முழுதும் நீரில் கடந்து விட்டு, சூரிய அஸ்தமனத்திற்குப் பின் கரைக்கு வந்து உணவைத் தேடி விட்டு பின் போய் நீர் நிலையில் அமிழ்ந்து போகும். சில சமயங்களில் மிதக்கும். மெல்ல நீந்தும். இல்லை என்றால் கரையோரம் உள்ள சதுப்பு நிலங்களைத் தேடிச் சென்று அங்கு படுத்துக் கொண்டு 'சன் பாத்' எடுக்கும்.

இது பல நேரங்களில் ஒழுங்காகச் செய்யும் ஒரே வேலை என்ன வென்றால், தன் ரயில்வே கேட்டைப் போன்ற வாயைத் திறந்து கொட்டாவி விடுவது தான்.

● நீர் யானை 'சன் பாத்' எடுக்கும் போது சில சமயங்களில் அதன் உடலில் உள்ள சில சுரப்பிகளில் இருந்து செந்நிற திரவம் வெளியேறும்.

இதைக் கண்டு, நீர் யானை இரத்த வியர்வை வடிக்கிறது என்று முன் காலத்தில் சொல்லி வந்தார்கள்.

சூரிய வெப்பத்தைத் தாங்கிக் கொள்ள, அதன் உடலில் சுரக்கும் பாதுகாப்பு நீரே அந்த செந்நீர் என்பதை பின் ஆய்வாளர்கள் கண்டார்கள்.

நீரோட்டம் மெல்ல இருந்தால்தான் அதனால் சிரமம் இன்றி வாழ முடியும். நீர் வேகமாக ஓடினால் அதனால் தாக்குப் பிடித்து வாழ்வது கடினம்.

சில நேரங்களில் வெள்ளம் ஏற்பட்டு அதனை நீர் யானை சமாளிக்க முடியாமல் அடித்துச் சென்று அதை கடலில் தள்ளி விடுவதும் உண்டு. அந்த நேரத்தில் சோம்பேறித்தனமான நீர் யானை தனது எல்லையை விட்டு அகன்று விடுவோமோ என்பதால் படுவேகமாக நீச்சலடித்து போராடும்.

- நீர் யானைகளில் 'குள்ள நீர் யானைகள்' என்றும் ஒரு வகையுண்டு. இவை 'மிக்மி' நீர் யானை எனப்படும். இந்த இனவகை மேற்கு ஆப்பிரிக்காவில் மட்டுமே வாழ்கின்றன.

பத்துப் பனிரெண்டு குள்ள நீர்யானைகள் சேர்ந்தால் தான் ஒரு பெரிய நீர் யானையின் எடைக்குச் சமமாக முடியும்.

இவைகள் பெரிய நீர்யானைகள் போல் கூட்டம்

கூட்டமாக வாழ்வது இல்லை. தனித்தனியாகவே வாழ்கின்றன. ஆனால், பேரு காலங்களில் மட்டும் ஒரு பெண் யானையுடன் ஓர் ஆண் யானை சில நாள்கள் இணையாகச் சேர்ந்து வாழும். பிறகு வந்தது போலவே பிரிந்து செல்லும். பெண் யானைக் குட்டி போடும். யார் துணையும் இன்றி குட்டியை தானே வளர்க்கும்.

அடர்ந்த சதுப்பு நிலக் காடுகளில் உள்ள நதிகளே குள்ள நீர் யானைகளின் வாழுமிடமாகும்.

குள்ள நீர் யானைகள் மிகவும் பயந்த சுபாவம் கொண்டவை. அதே நேரம் கூச்ச சுபாவமும் கொண்டவை. அதனால்தான் இவைகளைப் பார்க்கச் சென்றாலும் நம் கண்களுக்குத் தென்படுவது அரிதாக இருக்கிறது.

• யானைத் தந்தங்களை வேட்டையாடி நல்ல விலைக்கு விற்றபவர்களால் எங்கே யானை என்ற இனமே அழிந்து விடுமோ என்பதால் உலக நாடுகள் யானை வேட்டைக்குத் தடை விதித்தன.

வேட்டையாடி பெரும் பணம் சம்பாதித்த மனிதனால் சும்மா இருக்க முடியுமா? இந்த நேரத்தில் தான் அவனின் பார்வை நீர் யானையின் மேல் பதிந்தது.

யானையின் தந்தத்தைப் போல் நீர் யானையின் தந்தங்கள் அவ்வளவு உறுதியானது அல்ல. அதே

போல யானை யின் தந்தத்தைப் போல விலையும் அதிகமில்லை.

நீர் யானையின் தந்தங்கள் எளிதில் உடையும் தன்மை கொண்டது என்றாலும் சிறு சிறு காதணிகள், நகைகள் செய்யப்படும்.

கைதேர்ந்த வல்லுநர்களால் உருவாக்கப்பட்ட இவற்றை, யானைத் தந்தத்தால் செய்யப்பட்டதா, நீர் யானைத் தந்தத்தால் செய்யப்பட்டதா என்று சிலரால் மட்டுமே கண்டு பிடிக்க முடியும்.

நீர் யானைத் தந்தங்களும் யானைத் தந்தத்தைப் போலவே ஆப்பிரிக்காவில் வேட்டையாடப் பட்டு பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்பெயின் நாடுகளில் உள்ள இடைத் தரகர்கள் மூலம் ஜப்பான், ஹாங்காங் போன்ற இடங்களில் விற்பனையாகின்றன. அங்கே இவை சுத்தம் செய்யப்பட்டு சீராகச் செதுக்கப்பட்டு பெருமளவு அமெரிக்காவுக்கு ஏற்றுமதி ஆகிறது.

இப்படி நீர் யானைகளை வேட்டையாடுவதால் இங்கே இந்த இனமும் அழிந்து விடுமோ என்ற எண்ணத்தில் இதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று பலர் எண்ணுகிறார்கள்.

● பல ஆப்பிரிக்க கிராமவாசிகள் நீர்யானையைப் பல்வேறு காரணங்களுக்காக வேட்டையாடுகின்றனர்.

உணவு, அதன் தோல், அதன் பித்தப் பையில் இருந்து தயாரிக்கப்படும் ஒரு வகை மருந்து இவைகளுக்காக நீர் யானைகளைக் கொல்கிறார்கள்.

நீர் யானைப் பார்ப்பதற்கு சாதுவே தவிர, கோபம் வந்தால் பயங்கரமாகத் தாக்கி மனிதர்களைக் கொன்று விடும்.

ஆண்டு தோறும் பல ஆப்பிரிக்கர்கள் இவைகளால் சாகிறார்கள். தற்போது இவர்கள் நீர் யானைகளிடம் இருந்து தப்பிக்க ஏ.கே. 47 போன்ற நவீன துப்பாக்கிகளை வைத்திருக்கிறார்களாம்.

மனிதர்களுக்கு கொட்டாவி வந்தால், உடல் அசதியால் தூக்கம் வரப்போகிறது என்று பொருள். நீர் யானை கொட்டாவி விட்டால்? கொஞ்சம் பாதுகாப்பாக நின்று கொள்ளுங்கள். எதிரியை அது தாக்கப் போகிறது என்று பொருள்.





# கரடி

● கரடிக்கு நுண்ணுணர்வு அதிகம். சுமார் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அலாஸ்கா கரடிகள் பனிப் பாறைகளின் நுகர்வுக்குப் பயந்து, வட துருவம் பயணம் தொடங்கின.

அதற்கு வெகு காலத்திற்குப் பின்பும் கூட அதன் சந்ததிகள் தன் மூத்தோர் சென்ற பாதையில் சிறிதும் மாறாமல் வட துருவத்திற்குச் சென்றன.

இதனை ஆய்வு செய்த உயிரியல் அறிஞர்கள் வியப்பாகிப் போனார்கள்.

காரணம், பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இடம் பெயர்ந்த முன்னோர்களின் காலடித் தடம் அழுத்தமாக அப்படியே பனிப்பாறைகளில் படிந்து இருந்ததேயாகும்.

● துருவக் கரடிகள் அனைத்துமே இடது கைப் பழக்கம் உள்ளவை. தாக்குவதற்கோ, தற்காப்பிற்கோ அவை வலது கையைப் பயன்படுத்துவது இல்லை.

கருங்கரடிகள் 14 சதுர மைல் பரப்பளவிற்குள் மட்டுமே வசிக்கின்றன. இறக்கும் வரை இந்த எல்லையை விட்டு வெளியேறுவதில்லை.

● கரடிக்கு முதுகு அரித்தால் என்ன செய்யும்? இயற்கை அதற்கு வழி வகுத்துள்ளது. கரடி தன் பின்னங்கால்களை மரத்திற்குகருகில் ஊன்றி நின்று கொண்டு முடிகளடர்ந்த முதுகை மரத்தில் தேய்த்து அரிப்பைப் போக்கிக் கொள்ளுமாம். சரி முன்புறம் அரிப்பெடுத்தால் நம்மைப் போல் தான் சொறிந்து கொள்ளுமாம்.

● துருவ நாடுகளில் காணப்படும் வெள்ளைக் கரடிகளின் நாக்கு கறுப்பாக இருக்கும்.

● உலகில் நன்றாக நீண்ட நேரம் தூங்கும் விலங்குகளில் முதலிடம் வகிப்பது இந்திய நாட்டுக் கரடிதானாம்.

- எல்லாக் கரடிகளுக்கும் மரம் ஏறத் தெரியும்.

- கரடி நன்றாக நீந்தும். ஆனால் வேகமாக ஓட முடியாது. திடமாக நின்று கொண்டு எதிரியை மார்போடு இறுகத் தழுவி எலும்பை முறித்து விடும். சிங்கம், புலி கூட கரடியை ஒன்றும் செய்யாமல் பயந்து ஒதுங்கிச் சென்று விடும்.

- வட அமெரிக்காவிலுள்ள பெருங்கரடி மூன்றே செகண்டுகளில் 150 அடி தூரம் ஓடும் ஆற்றல் பெற்றது.

- கரடி வருடத்திற்கு இரண்டு குட்டிகள் போடும்.

- போலார் கரடி, ஆர்க்டிக் கடலில் பனிக் கட்டிகளின் மீது வாழ்கின்றன. இவை வெள்ளை நிறத் தில் இருக்கும். இதன் எடை 450 கிலோ இருக்கும். இவை வேகமாக நீந்தும். இவற்றிற்கு அதிக பார்வை யும், நுகர் உணர்வும் அதிகம் உண்டு. குளிர் காலத்தில் கர்ப்பமாகியுள்ள பெண் கரடிகள், பனிக்கட்டிகளின் இடையே ஆழமாகக் குழி தோண்டி அதில் வாழ்கிறது. இங்கேயே குட்டிகளையும் போடுகின்றன. பிறந்த குட்டிகள் தாயுடன் 18 மாதங்கள் சேர்ந்து வாழ் கின்றன.

- அமெரிக்காவைச் சேர்ந்த கருப்பு நிறப் பெண் கரடி ஜனவரி மாதத்தில் கருவுற வேண்டும்

என்பதற்காகக் குளிர்காலம் தொடங்கும் முன்பாகவே தூங்கப் போய் குளிர்கால இறுதியில் எழுகிறது. துருவக் கரடி குளிர்காலத் தொடக்கத்தில் கருவுற்று, கர்ப்ப காலம் முழுதும் தூக்கத்தில் இருந்து விட்டு வசந்த காலத்தில் குட்டிகளுடன் இருப்பிடத்தை விட்டு வெளியே வருகிறது.

- எல்லா வகை கரடிகளுக்கும் கனமான உடலும், குட்டையான வாலும் உண்டு. கால்கள் மிகத் தடியாகவும், பலம் பொருந்தியும் இருக்கும். மனிதனைப் போலவே நடக்கும். இவற்றின் பின்னங்கால்களின் ரேகை மனிதனது ரேகையைப் போன்றே இருக்கிறது. இவை 15 முதல் 30 ஆண்டுகள் வரை வாழும்.





# மான்

- மான்கள் ஆஸ்திரேலியா அண்டார்டிக்கா தவிர உலகெங்கும் வாழ்கின்றன.

- இவற்றின் கால்கள் நீளமாக இருப்பதால், இவற்றின் எதிரிகளான சிங்கம், புலி, ஓநாய் போன்ற எதிரி களிடமிருந்து வேகமாக ஓடி தப்பித்துக் கொள்கின்றன.

- மானின் செவியுணர்வு மிக நுட்பமானதாக இருப்பதால் சிறிய ஒலியையும் தன் நீண்ட காதுகளால் அறிந்து கொள்ள முடிகிறது.

● கண் பார்வையும் நுகரும் உணர்வும் கூட மிக நுட்பமாக உள்ளது.

மான்கள் பழுப்பு நிறத்தில் இருக்கும். சில மான்களின் தோலில் வெள்ளைப் புள்ளிகள் இருக்கும்.

● மான்கள் எதிரிகளிடம் இருந்து தப்பிக்க இயற்கை தந்த சீதனம் இதன் கொம்புகளாகும். வலுவான தன் கொம்புகளால் சிங்கத்தைக் கூட சில வேளைகளில் குத்திக் கிழித்து விடும். இதன் கொம்புகள் ஆண்டு தோறும் உதிர்ந்து மீண்டும் வளரும்.

● ஆண் மான்களுடன் பல பெண்மான்கள் ஒன்று கூடி வாழும். ஒரு ஆண்மானுடன் பல பெண்மான்கள் இனப்பெருக்கம் செய்யும். இவை எந்தக் காலத்திலும் இனப்பெருக்கம் செய்யும். 6 முதல் 7 குட்டிகள் போடும்.

● இவை தாவர உண்ணி. இலை, தழை, புல்லே இதன் உணவாகும். மான்களில் பலவகை உண்டு.

● ஜாவா, சுமத்திரா, மலேஷியா நாடுகளிலும் இந்தியா, தெற்காசியாவிலும் டிரகுலிடே மான்கள் காணப்படுகின்றன. இதற்கு எலிமான் என்ற பெயரும் உண்டு. இந்த மான் முயலின் அளவுதான் இருக்கும். 'செவ்ரோ 'டெய்ன்ஸ்ங்' என்ற இனத்தைச் சேர்ந்தது

இந்த மான்கள் என உயிர் நூல் ஆய்வாளர்கள் கருது கிறார்கள்.

இம்மான்களின் உயரம் ஓர் அடி பத்து அங்குலம் கொண்டது. வெளிர் மஞ்சள் நிறத்தோடு இருக்கும். உடல் முழுதும் சாம்பல் நிறப்புள்ளிகள் நிறைந்திருக்கும். இந்த மான்கள் தண்ணீரில் நன்றாக நீந்தும். எதிரிகள் வந்தால் நீரில் குதித்து தப்பித்து விடும். இதனால், மற்ற மான்களைப்போல் வேகமாக ஓட முடியாது. எனவே இது பாறைகளிலும், புதர்களிலும் மறைந்தே வாழுகின்றது. புலி, சிங்கம் ஆகிய கொடிய விலங்குகளைக் கண்டு விட்டால் மரக்கிளைகளைத் தனது கோரப் பற்களால் பற்றிக் கொண்டு தொங்கி விடும்.

மே, ஜுன் மாதங்களில் இது தன் இணையுடன் கூடும். பெண்மான் கருத்தரித்து ஆறு மாதங்களில் குட்டிகளை ஈனுகிறது. ஒரே தடவையில் இரண்டு குட்டிகளை போடுகிறது. இது தன் குட்டிகளை எதிரிகளிடமிருந்து பாதுகாக்க பாறைகளுக்கு அடியிலோ, புதரிலோ மறைத்து வைக்கும். இதன் இறைச்சி மிகவும் சுவையாக இருக்கும்.

- கஸ்தூரி மானுக்கும் இந்த டிரகுலிடே மானுக்கும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவை மிகவும் சிறிய உருவம் கொண்டிருப்பதால்

'பிக்மி' என்ற மானுக்கு அடுத்தபடியாக இந்த மானைத்தான் குறிப்பிடுகின்றார்கள். ஆப்பிரிக்காவில் காணப்படும் இத்தகைய மான்களை 'நீர்ச் செவ்ரோ டெய்ன்ஸ்' என்று அழைக்கின்றனர்.

இதன் உயரம் 1 அடி 10 அங்குலம் நிறம் வெளிர் மஞ்சள். சாம்பல் நிறப்புள்ளிகள் உடல் முழுவதும் இருக்கும்.

இவ்வகை மான்கள் ஆப்பிரிக்காவில் நிறைய இருக்கின்றன. அங்கு இதை நீர்ச் செவ்ரோ டெய்ன்ஸ் என்று கூறுகின்றனர். இது மற்ற நாடுகளிலுள்ள 'டிரகுலிடே' மானைவிடச் சற்றுப் பருமனானது. இது நீரில் நன்றாக நீந்தும். ஆப்பிரிக்காவின் ஈரமான காடுகளில் வாழ்கிறது. இதனைப் பிடிக்கச் சென்றால், நீரில் தப்பி குதித்து விடும். இதனால் வேகமாகச் செல்ல இயலாது. எனவே இது பாறைகளிலும், புதர்களிலும் மறைந்தே வாழ்கிறது.

உயிர் நூல் வல்நூநர்கள் இதற்கு 'டிரகுலிடேங் என்ற பெயரைச் சூட்டினர். இதற்கு 'சிறிய ஆண் ஆடு' என்று பெயர்.

● நர்மதை காட்டுப் பகுதியில் வசிக்கும் அபூர்வமான மான் இனம் சாம்பர் ஸ்டாக். இதன் கொம்புகள் ஒன்றரை மீட்டர் வரை வளரக்கூடியது. ஒரு கொம்பின் எடை மட்டும் சுமார் 250- 340 கிலே

வரையிருக்கும். சுமார் 600 கிலோ எடையுள்ள கொம்புகளைச் சுமக்கும் இந்த மான் அபூர்வமான ஒன்றே.

- மான் இனங்களிலே கஸ்தூரி மான், சீனத்து நீர்மான். இந்த இரண்டையும் தவிர மற்ற இனங்களிலுள்ள ஆண் மான்களுக்கு கிளைகள் கொண்ட கொம்புகள் உள்ளன.

- 'பனிமான்' என்றழைக்கப்படும் ரீய்ண்டியர் இனத்தில் ஆண்மானிற்கு இருப்பது போல் பெண் மானிற்கும் கொம்புகள் இருக்கும்.

- நறுமணப் பொருளான கஸ்தூரியைத் தரும் கஸ்தூரி மான்களில் கொம்புகள் வளர்வதில்லை. இருப்பினும் கொம்புகளுக்குப் பதிலாகக் கோரைப் பற்கள் மிகப் பெரிதாக மேல் தாடையிலிருந்து கீழ்நோக்கி வளர்ந்துள்ளன. மேலும் கஸ்தூரி மான் தவிர மற்ற மான் இனங்களில் பித்தப்பை இருப்பது இல்லை.

- பரிணாம கோட்பாட்டின்படி மிகவும் பழமையான மான் இனம் என்று 'மன்டியாகஸ்' மான்கள் கருதப்படுகின்றன. இது நாய் போன்று குரைக்கும் தன்மை உடையது. உலகில் ஒரு சிறிய குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே வாழ்கின்றன. இந்தியா, பர்மா, தாய்லாந்து, போர்னியோ, சீனா முதலிய நாடுகளில் காணப்படுகின்றன.

- இம்பாலா இன மான்கள் ஆப்பிரிக்கா கண்டத்தில் வாழ்கின்றன. மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் ஓடும் திறன் கொண்ட இம்பாலா மான் ஒரே தாவில் 9 மீட்டர் தாண்டி விடும்.

- ஆப்பிரிக்கக் காடுகளில் வாழும் பபூன் இனக்குரங்குகளுக்கும் இம்பாலா இன மான்களுக்கும் புரிந்து கொள்ளும் தன்மையுண்டு. காட்டில் பயங்கர மான புலி, சிங்கம் போன்ற விலங்குகளைக் கண்டால், இம்பாலா மான் குரல் எழுப்பி பபூன் குரங்கினை எச்சரிக்கும். இம்பாலாவைத் தொடர்ந்தால் பபூன் தன் கோரைப் பற்களை பயங்கரமாக இளித்துக் காட்டிட அவை பயந்து ஓடி விடுமாம்.





# எலி

♦ உலகம் முழுதும் நிறைந்து இருக்கும் எலிகளால் மனிதனுக்கு நோய்களும், தீமைகளுமே உண்டாகிக் கொண்டிருக்கின்றன. எலிகளை ஒழிக்க பல்வேறு முறைகளைப் பயன்படுத்தியும், புதுப்புது மருந்து களைக் கண்டுப் பிடித்தும் எலிகளை ஒழித்திட முடியாமல் மக்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதுதான் உலகம் முழுவதும் உள்ள உண்மை.

♦ எலிகள் வீட்டிலும், நாட்டிலும் மக்களுக்கு எண்ணற்ற கஷ்டங்களையும், நஷ்டங்களையும் ஏற்படுத்துகின்றன.

♦ கழிவு பொருட்கள், சிறுநீரால் வேண்டாத வாசனையை ஏற்படுத்துகின்றன.

வயல், தோட்டங்களில் காணப்படும் எலிகள் பயிர் வகைகளை நாசப்படுத்துவதோடு, அதற்குத் தேவை யான அளவு திருடியும் சென்று விடுகின்றன. மேலும் மனிதர்கள் வீடுகளில் சேமித்து வைத்திருக்கும் தானிய மணிகளையும் சேதப்படுத்தி விடுகிறது.

நமது நாட்டில் காணப்படும் எலிகளை வீட்டு எலிகள், வயல் எலிகள் என இரு வகைகளாக பிரிக்கலாம். வீட்டு எலிகளில் மூன்று வகைகளும், வயல் எலிகளில் சுமார் 120 வகைகளும் உள்ளன. இவற்றின் மொத்த எண்ணிக்கை சுமார் 800 கோடிக்கும் அதிகம் ஆகும். ஒரு கோடி எலிகள் மூன்று ஆண்டுகளில் 35 கோடி எலிகளாக பெருகும் வல்லமை கொண்டவை. ஆண்டொன்றிற்கு சுமார் 2500 கோடி ரூபாய் மதிப்புள்ள 25 மில்லியன் டன் உணவு தானியங்களை தின்றும் மற்றும் இதன் மலம், சிறுநீர் மூலம் எச்சப்படுத்தியும் அழிக்கின்றன.

♦ ஆறு எலிகள் ஒரு மனிதனின் உணவை தின்னக்கூடியவை. ஒவ்வொரு எலியும் சராசரி 30 முதல் 60 கிராம் வரை ஒரு நாளைக்கு உணவைத் தின்னும்.

* நார்வே நாட்டில் 'லெம்மிங்ஸ்' எனப்படும் ஒருவகை எலிகள் உள்ளன. இவை நிறைய குட்டிகளை போடும். கூட்டமாக ஒரே வளையில் வாழும். சில சமயம் இடப்பற்றாக்குறை, உணவுப் பற்றாக்குறை வந்து விட்டால் அக்கூட்டத்தில் உள்ள பல எலிகளுக்கு வாழ்க்கையே வெறுத்து விடும். அப்போது அந்த எலிகள் கூட்டமாக தங்கள் வசிப்பிடத்தை விட்டு வெளியே வந்து அருகிலுள்ள ஓடையிலோ, ஆற்றிலோ விழுந்து தற்கொலை செய்து கொள்ளும். இப்படி ஒரு விநோதப் பழக்கம் இன்றும் இருந்து வருகிறது.

♦ உலகில் எல்லா இடங்களிலும் எலிகள் நிறைந்து வாழ்கின்றன. ஆனால், பழங்காலத்தில் ஐரோப்பாவில் எலிகளே இருக்கவில்லை. ஆசியாவில் இருந்துதான் இவை உலகம் முழுவதும் சென்றன. ஐரோப்பாவைச் சென்றடைந்த முதல் இனம் கறுப்பு எலிகள்தான். தெற்கு ஆசியாவிலிருந்து 13 வது நூற்றாண்டில் இவை சென்றன. 18வது நூற்றாண்டில் மத்திய ஆசியாவிலிருந்து பழுப்புநிற எலிகள் சென்றன என்று ஆய்வுகள் கூறுகின்றன.

♦ ஒட்டகங்களை விட அதிக நாள் தண்ணீர் இல்லாமலேயே உயிர் வாழ எலிகளால் முடியும்.

♦ முள் எலியின் இருதயம் ஒரு நிமிடத்திற்கு 300 முறை துடிக்கிறது.

♦ நில நடுக்கம் ஏற்படுவதை எலிகளின் செயல்களால் அறிந்து கொள்ளலாம். எலிகள் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளியே ஓடிவிடும்.

♦ வளை எலி எனப்படும் நுன்னெலியால் 12 நிமிடத்தில் 6 அடி நீளத்திற்கு வளை தோண்ட முடியும்.

♦ எலியின் கர்ப்ப காலம் 22 நாள்கள்.

மிகச் சிறிய பாலூட்டியான வெள்ளைப் பல் சுண்டெலி 37 மி.மீ நீளமுள்ளது.

♦ 'கங்காரு எலி' எனும் பிராணி ஓர் அதிசயமான பிராணியாகும். இதன் வாழ்நாள் முழுவதும் தண்ணீர் அருந்துவதே இல்லை.

♦ பாலைவன எலி பகல் முழுவதும் வளைக்குள் ஓய்வெடுத்து, இரவில் சூரிய வெப்பம் தணிந்த பின் பாலைவனத்தில் இரைதேட ஆரம்பிக்கும். இதன் உடலில் வியர்வை உண்டாவது இல்லை. மிகச் சிறிய அளவில் சிறுநீர் வெளியேற்றும். இவ்வகை எலிகள் மூன்று ஆண்டுகள் தண்ணீர் குடிக்காமல் உயிர்வாழும் ஆற்றல் கொண்டதாகும்.

♦ எலியின் மேல் பல் விழுந்து விட்டால் கீழ் பல் வேகமாக வளர்ந்து மூளையைத் துளைத்து விடும். இதனால், எலி இறந்து விடும்.

♦ டிரோப்ரியாண்ட் தீவில் உள்ள எலிகள் தண்ணீரில் வாலை நுழைத்து ஆட்டி நண்டுகளைப் பிடிக்கின்றன.

♦ அமெரிக்கா - மெக்சிகோ எல்லைப் பகுதியில் பெரிய அளவில் பெருச்சாளிகள் வாழ்கின்றன.

இவற்றிடையே ஒரு விநோதமான பழக்கம் உள்ளன. ஒரு பெருச்சாளி குட்டி போட்ட பிறகு குட்டிகள் தனி வளையில் இருக்கும். அம்மா, அப்பா பெருச்சாளிகள் வேறு ஒரு வளையில் இருக்கும்.

குட்டிகள் இருக்கும் வளையில் வேறு பெருச்சாளி களின் குட்டிகளும் இருக்கும். வளை கொஞ்சம் பெரிதாக இருந்தால் இருபதுக்கு மேற்பட்ட குட்டிகள் வாழும்.

குட்டிகளுக்கு பால் கொடுக்க வேண்டிய நேரத்தில் வளையருகே தாயும், தந்தையும் ஆஜராகி விடுவார் கள்.

வந்துள்ளது எதிரிகள் அல்ல என்பதை உணர்த்தும் வகையில் தாய்ப் பெருச்சாளி விசில் அடிப்பது போல் குரல் எழுப்புகிறது.

அதைக் கேட்ட எல்லா குட்டிகளும் வளைக்குள் இருந்து ஒன்றன் பின் ஒன்றாய் வரிசையாக வெளியே வருகின்றன.

வெளியே வந்துள்ள குட்டிகளில் மோந்து பார்த்து தன் குட்டிகளை மட்டும் அடையாளம் கண்டு கொண்டு விடுகிறது.

பின் அவற்றைத் த்னியே மறைவான நிழல் தேடிச் சென்று, அங்கே பால் கொடுக்கிறது.

இந்த நேரத்தில், வேறு குட்டிகளின் தாய் தந்தையர் கூட வளைக்கு அருகில் வராது. பால் கொடுத்த பின் குட்டிகளை வளைக்கு அனுப்பிவிட்டு தாய்- தந்தை சென்று விடுகின்றன.

இதன்பிறகு வேறு குட்டிகளின் தாய் - தந்தை வருகின்றன. தந்தை காவல் இருக்க குட்டிகள் தாயிடம் பால் குடிக்கின்றன.

♦ எலிகள் ஓர் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரை உயிருடன் வாழும். பிறந்த 45 நாள்களுக் குள்ளேயே எலிகள் கருவுருகின்றன. பின் 21 நாள்களில் குட்டிப் போடுகின்றன. ஒரு தடவைக்கு 8 முதல் 21 குட்டிகள் வீதம் ஆண்டுக்கு 4 முதல் 6 தடவை குட்டி போடுகின்றன.



# கழுதை

♦ இன்னும் கிராமப்புறங்களில் பிறந்த குழந்தைக்கு கழுதைப் பால் கொடுத்தால் அது நன்றாகப் பேசும். அதன் எதிர்காலம் நன்றாக அமையும் என்பத் தாய்மார்களின் நம்பிக்கையாக இருந்து வருகிறது.

♦ கழுதைப் பாலைப் பற்றி ஆராய்ச்சி செய்த ஐதராபாத் அரசு ஆயுர்வேதக் கல்லூரி தமது ஆய்வுக் குறிப்பில் 'குழந்தைகளுக்கு கழுதைப் பால் மிகச் சிறந்த உணவு' என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

♦ குழந்தை பிறந்த முதல் மூன்று நாள்களுக்கு ஒவ்வொரு நாளும் அரைக் கரண்டி என்ற அளவில் கழுதைப் பாலைக் கொடுத்து வந்தால் அக்குழந்தை யின் சுவாச உறுப்புகள் நல்ல பலம் பெற்று விரி வடைவதோடு, உறுப்புகளும் நல்ல முறையில் இயங்கும்.

♦ கழுதைப் பால் பல ஆயுர்வேத மருந்துகளிலும் பயன்படுத்தப்படுகிறது. மார்புச் சளிக்கு கழுதைப் பாலே மிகச் சிறந்த உணவு எனக் கூறப்பட்டு இருப்பதை இங்கே உணர வேண்டும்.

ஆகவே, இது குழந்தைகளுக்கு மிகச் சிறந்த உணவு என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ஆனால் பாலை அளவுடன் கொடுக்க வேண்டும்.

♦ கழுதை நின்று கொண்டே தூங்கும்.

♦ இந்தியாவில் இரண்டு வகையான கழுதைகள் உள்ளன. சாதாரணமாகக் காணப்படும் நாட்டுக் கழுதை தவிர, குஜராத், லடாக் போன்ற பகுதிகளில் காணப்படும் ஒரு வகை வன இனமும் உண்டு.

♦ வனக் கழுதையை நம்மில் பலர் பார்த்திருக்க மாட்டார்கள். இவை வரிக்குதிரையைப் போன்று இருக்கும். சாம்பல் அல்லது வெண்மை நிறத்தில் உடல், முதுகில் இருந்து வால்வரை கரும்பழுப்பு அல்லது மஞ்சள் நிறக்கோடு, பின்புறம் முதுகு போன்ற பகுதிகளில் மங்கிய செம்மஞ்சள் நிறத்திட்டுகள், இவையே இதன் தனிச்சிறப்பு.

♦ பொதுவாக கழுதைகள் உறுதியான உடலையும், நல்ல நோய் எதிர்ப்பு சக்தியையும் கொண்டுள்ளன.

அதிக பட்ச தட்ப வெப்ப மாறுபாடுகள் எதுவும் இவற்றைப் பாதிப்பதில்லை. எளிய தீனியும் கொஞ்சம் ஓய்வும் கொடுத்தாலே போதும்.

இந்தக் கழுதைகள் 50 கிலோ எடையுடன் மணிக்கு 3 கி.மீ. வேகத்தில் நாளென்றுக்கு 40 கி.மீ வரை நடக்கும் ஆற்றல் கொண்டது.

♦ சீனாவில் ஒரு புதிய இனவிருத்தியின் வழியாக சுமார் 8 மில்லியன் கலப்பினக் கழுதைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்கழுதைகள் 400 கிலோ சுமையை சுமந்து வண்டியை இழுக்கும் அளவிற்கு வலிமை கொண்டுள்ளன.

♦ நமது நாட்டிலுள்ள கழுதைகள் சுமார் 90 செ.மீ. உயரமிருக்கும். உயர் இனக்கழுதைகள் 135 செ.மீ. உயரம் இருக்கும்.

## கோவேறு கழுதை

♦ ஆண் கழுதைக்கும், பெண் குதிரைக்கும் பிறக்கும் கலப்பினப் பிறவிதான் கோவேறு கழுதை!

இது குதிரையை விட வலிமை கொண்டது. கொஞ்சம் புத்திசாலித்தனம் கொண்டதும் கூட.

கவனமுடன் மலையேறுவதில் திறமை பெற்றது. இது.

குதிரையைப் போல் கொஞ்ச நேரம் மட்டுமே உழைத்து விட்டு களைப்படையாது, நீண்ட நேரம் வரை உழைக்கும்.

இந்தக் காரணங்களால் தான் விவசாயிகள் கோவேறு கழுதையை ஏர் ஓட்டுவதற்கு பயன்படுத்து கிறார்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் இராணுவத் தினருக்கு இது பெரும் பங்கில் பணியாற்றுகிறது.

இந்திய ராணுவத்தில் வீரர்களுக்கு வேண்டிய பெரும் சுமைகளையும், உணவுப் பொருட்களையும் துப்பாக்கிப் போன்ற ஆயுதங்களையும் சுமந்து செல்வது கோவேறு கழுதைகள்தான்.

18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயர்கள் இந்திய இராணுவத்தில் கோவேறு கழுதையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று குறிப்பு ஒன்று சொல்கிறது.

இதனால் தான் இராணுவத்தினர் கோவேறு கழுதைகளை வளர்த்து பராமரிக்கும் பண்ணைகளை அமைத்திருக்கிறார்கள். இதனால் ஐரோப்பா, தென்அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து இந்திய இராணுவத்தின் உயர்ந்த ரக கோவேறு கழுதைகளை

வாங்குகிறார்கள். காஷ்மீர் போன்ற மலைப்பிரதேசங்களில் உள்ள மக்கள் தங்கள் உடமைகளைச் சும்க்க கோவேறு கழுதைகளையே பயன்படுத்துகிறார்கள்.

கோவேறு கழுதைகளால் இனவிருத்தி செய்ய இயலாது. காரணம், கழுதைக்கும் குதிரைக்கும் பிறக்கிற கலப்பினப் பிறவி என்பதால் தான். அவை சுத்த மலடு. இயற்கையின் செயல் இது.



# ஒட்டகம்



♦ முதன் முதலில் ஒட்டகம், வட அமெரிக்காவில் தோன்றியதாக ஆய்வு தெரிவிக்கின்றன.

♦ ஒட்டகம் 15 மணி நேரம் தொடர்ந்து நடக்கும் ஆற்றல் பெற்றது.

♦ ஒட்டகம் ஒரு நாளில் 40 லிட்டர் பால் தரும். பசுவின் பால் 4 செ. வெப்பநிலையில் 14 நாள்கள் வரை கெடாமல் இருக்கும். ஆனால், ஒட்டகப் பால் 60 நாட்கள் கெடாது இருக்கும்.

♦ ஒட்டகத்தின் கர்ப்ப காலம் 375 முதல் 382 நாள்கள் வரை.

♦ ஒட்டகத்திற்கு வேர்க்காது. ஏனென்றால் அதற்கு வியர்வை நாளங்களே இல்லை.

♦ 15 நிமிடங்களில் 20 காலன் தண்ணீரை ஒட்டகம் உறிஞ்சிக் குடிக்கும்.

♦ இறந்து கிடக்கும் ஒட்டகத்தை இன்னொரு ஒட்டகம் பார்த்தாலே தன் உயிரை விட்டு விடுமாம்.

♦ நான்கு கால் உயிரினங்களில் ஒட்டகத்திற்கு மட்டுமே நீந்தத்தெரியாது என்று சொல்லி வந்தார்கள். தற்போது ஆய்வின் படி அதற்கு நீந்த வரும் என்று சொல்லப்படுகிறது.

♦ ஒட்டகம் 11/2 டன் எடையைத் தூக்கிக் கொண்டு மைல் கணக்கில் மிக எளிதாக நடந்து செல்லும் திறம் கொண்டது.

♦ ஒட்டகப் பாலில் , தாய்ப்பாலைவிட இரண்டு மடங்கும் பசும்பாலை விட மூன்று மடங்கும் வைட்டமின் 'சி' உள்ளது.

♦ ஒட்டகம் 540 கிலோ வரை எடை இருக்கும்.

♦ ஒட்டகத்திற்கு சராசரி வயது 86.

♦ ஒட்டகத்தின் முதுகு கோணலாய் வளைந்து இருந்தாலும், அதன் முதுகு எலும்பு நேராகத் தான் இருக்கும்.

♦ இதற்கு உடலில் ஒரே சீராக வெப்ப நிலை இருக்காது.

♦ ஒரே அடியில் மனிதனின் மண்டை எலும்பை நொறுக்கி விடும் வலிமை கொண்டது.

♦ வைக்கோல், தவிடு, புல், சோளம், பருத்திக் கொட்டை முதலியவை இதன் உணவாகும்.

♦ ஒட்டகத்தின் பிறந்த குட்டி மூன்றரை அடி உயரம் இருக்கும்.

♦ ஒட்டகம் பிறந்து இருபத்து நாலு மணி நேரத்தில் எழுந்து நடக்கத் தொடங்கி விடும்.

♦ ஒட்டகம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குட்டி போடும்.

♦ ஒட்டகம் ஒரு மைலுக்கு அப்பால் நீர் நிலைகள் இருந்தால் கூட தன் மோப்ப சக்தியால் கண்டு பிடித்து விடும்.

♦ ஒட்டகம் பார்ப்பதற்கு சாதுபோல இருந்தாலும், கள்ளத்தனம் கொண்டது.

♦ ஒட்டகம், நாய், யானை போல அன்பு, நட்பு நன்றி கொண்ட விலங்கல்ல. திடீர் திடீரென அதற்கு வெறி பிடித்து பாகனையே கடித்துவிடும். பழி வாங்கும் எண்ணமும் கொண்டது.

♦ ஒட்டகத்தின் கடி மிகக் கொடியது. இதற்குக் காரணம், அதன் பற்களின் அமைப்பேயாகும். இவை பிறக்கும் போது மேல் தாடையில் 6 உளிப் பற்களும், கீழ்த்தாடையில் 6 உளிப் பற்களும் இருக்கிறது. ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு கோரைப் பல்லும் முன் கடைவாய்ப் பல்லும் பின் கடைவாய்ப் பல்லும் இருக்கிறது. ஒட்டகம் வளர வளர மேல் தாடையிலுள்ள 6 உளிப் பற்களைத்தவிர மற்ற பற்கள் விழுந்து விடுகின்றன. இவையும் கோரைப் பற்கள் போன்ற அமைப்பை பெறுகின்றன. இக்காரணங்களால் தான் ஒட்டகமானது நாயை விட பல மடங்கு பயங்கரமாக கடிக்கிறது.





# பூனை

♦ பூனைகளில் ஒன்றல்ல இரண்டல்ல 330 வகைகள் உண்டு. இதில் 'ரெக்டோல்' எனும் வகையே உயர்ந்த வகை பூனையாகும். இதன் எடை 6 கிலோவில் இருந்து 9 கிலோ வரை இருக்கும்.

♦ மனிதர்களிடம் மட்டும் குள்ளமல்ல, பூனைகளிடமும் குள்ள இனம் உண்டு. இவைகளில் நன்கு வளமான பெண் பூனை 1.80 கிலோ மட்டுமே இருக்கும்.

♦ பூனைகளின் வாழ்நாள் மிகக் குறைவுதான். எனினும் பிரிட்டனைச் சேர்ந்த 'புஷ்' எனும் பூனையின்

வாழ்நாள் அதிகம் போலும். அது தனது 36வது பிறந்த நாள் முடிந்து மறுநாள் இறந்து போனது.

♦ 'டஸ்டி' எனும் பூனை தன் வாழ்நாளில் 420 குட்டிகளுக்குத் தாயாகி கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற்றுள்ளது, வியப்பிற்குரியதாகும்.

'என்டிகோன்' எனும் நான்கு வயதுப் பூனை ஒரே பிரவசத்தில் 19 குட்டிகளைப் போட்டு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தக் குட்டிகளில் 14 ஆண் குட்டிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

♦ மிஸ்ர் நாட்டில்தான் பூனைகள் அதிகம். இங்கே வீடு, அலுவலகம், தோட்டம், ஹோட்டல் என எங்கு பார்த்தாலும் நிறைந்து திரியுமாம்.

♦ பூனைகள் தனக்கு நோய் வராமல் பாதுகாத்துக் கொள்வதில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கின்றன.

பூனை எலியைப் பிடித்துத் தின்று விட்டு 'வணங்கி' என்று சொல்லப்படுகிற குப்பை மேனி என்ற மூலிகையை தின்னும். இந்தக் குப்பை மேனிக்கு எலி விசத்தை முறியடிக்கக்கூடிய குணமும் உண்டு.

இதன் உடலில் மயிர் என்பதே கிடையாது. அது தான் பெரிய அதிசயம்.

அமெரிக்காவிலுள்ள ரான்ட்ரா அல்டர் என்ற பெண்ணிடம் இந்த விநோத பூனை ஒன்று இருக்கிறது.

♦ பூனையின் எலும்பு மண்டலம் மனிதனின் எலும்பு மண்டலம் போன்று கபாலம் முதுகெலும்புத்

தொடர், மார்பெலும்பு, கைகால் சட்டக அமைப்புக் கொண்டது. ஆனால், பூனையின் உடம்பில் மொத்தம் 250 எலும்புகள் உள்ளன. மனிதனின் உடம்பில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை 206 ஆகும்.

- புலி, சிறுத்தை, சிங்கம் எல்லாம் பூனை வகையைச் சேர்ந்த பெரிய பூனைகள் எனலாம். பூனைக் குடும்பத்தில் பல சிறிய விலங்களும் உள்ளன. சிறிய பூனைகளில் 11 வகைகள் உள்ளன. இத்துணைக் கண்டத்தில் உள்ள இவற்றில் கரால்கால், மீன் பிடிக்கும் பூனை, பல்லாஸ் பூனை என்ற வகைகளும் உள்ளன.

புதர் மறைவிலும், பாலைவனத்திலும் வாழ்பவை கரால் பூனையாகும். இப்பூனை 50 செ.மீ. நீளமே இருக்கும். இப்பூனை ஒரே சமயத்தில் ஏழு, எட்டு பறவைகளைக் கூட பிடித்துக் கொன்று விடும் ஆற்றல் பெற்றது.

குஜராத், ராஜஸ்தான், மத்தியபிரதேசம் மற்றும் மத்திய இந்தியாவில் இப்பூனைகள் வாழ்கின்றன.

நாம் வீட்டில் வளர்க்கும் பூனைகளைப் போல் இரண்டு மடங்கு மீன் பிடிக்கும் பூனை பெரிதாக இருக்கும். இதன் பாதங்கள் தட்டையாக வாத்தின் பாதங்களைப் போல் இருக்கும். விரைந்து நீந்தும் ஆற்றல் பெற்றது. நீரில் உள்ள பாறைகளின் மேல் நடு ஆற்றில் இரைக்காக மீன் பிடிக்க உட்கார்ந்து இருக்கும். அமைதியாக.

அப்போது அங்கு நீரில் வரும் மீன்களை தன் கூரிய வளைந்த கால் நகங்கள் மூலம் 'லபக்' கென்று பிடித்து உணவாகத் தின்னும். இந்த பூனை தன்னை விட அளவில் இரு மடங்கு கொண்ட மிருகங்களையே தாக்கும் சக்தி கொண்டது.

♦ லடாக் மலைப்பகுதிகளில் பல்லாஸ் பூனைகள் வாழ்கின்றன. இது நம் வீட்டுப் பூனையைப் போன்று சிறிதாக இருக்கும். இதன் தலை தட்டையாக இருக்கும். முகத்தில் வரிக்கோடுகள் இருக்கும்.

பிற பூனைகளிலிருந்து வீட்டுப் பூனைகள் பழக்கத்தால் அதிகம் மாறி விட்டன. சயாம் நாட்டுப் பூனைகள் பெரிதாக இருக்கும்.

* புகழ்பெற்ற தாய்லாந்து பூனைகள் அனைத்தும் வெள்ளை நிறமாகவே இருக்கும்.

* நாம் வீட்டில் பூனை வளர்ப்பதே எலிகளை ஒழிப்பதற்காகத்தான். ஆனால் உலகிலேயே எலியைப் பிடிக்காத பூனை ஒன்று உண்டு என்றால் நம்புவீர்களா! ஆமாம், 'லூஸி' என்ற ஜப்பான் பூனை ஒன்று சைவப் பூனையாகவே வாழ்ந்து வருகிறது. இது எலிகளை பிடிக்கவும் செய்யாது. தின்னவும் செய்யாது. எலிகள் விளையாடுவதை வேடிக்கை தான் பார்க்கும்.

★★★★★